அன்பளிப்பு
தி: கி. வா. ஜ
'காந்தமலை'
சென்னை - 600 028

# அகில பர்மா தமிழர் சங்கம்

தலைமைக் காரியாலயம்

109-113, லூயிஸ் வீதி, இரங்கூன்.

## ஆருவது-ஏழாவது ஆண்டுகளின் அறிக்கை.

13-4-57 முதல் 12-4-59 வரை

# SIXTH & SEVENTH YEARS REPORT OF ALL BURMA TAMILIAN ASSOCIATION, H. Q.

109, 113, LEWIS STREET, RANGOON.

# முகவுரை

ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி இசை கொண்டு வாழ்ந்த தமிழின் வெற்றியையும் பெருமையையும் ஒல்காப்பெரும் புகழ்த் தொல்காப்பிய நூல்போன்ற தமிழரின் வாழ்வியல் வரலாற்று நூற்கள் கூறுகின்றன. அகழ்ந்தெடுக்கப்பெற்ற செப்பேடுகளும், அணியணியாகக் குன்றோரங்களில் நிற்கின்ற நடுகற்களும், புதை பொருள் சின்னங்களும் தமிழின் வாழ்வையும், தமிழரின் வாழ்வையும் குறித்துப் பரணி பாடிக் கொண்டிருக்கின்றன.

அலைகடல் பலவினும் பலகலம் செலுத்திக் கடாரம், சீனம், சாவகம், யவனம், ஈழம்போன்ற பல்வேறு நாடுகளிற் குடியேறிய தமிழர்கள், கடாரம் என்னும் இப்பர்மிய நாட்டிலும் குடியேறினர்.

இந்நாடு,வரலாறு காணாத காலத்திற்கு முன்பிருந்தே தமிழர் பர்மியர் தொடர்பு ஏற்பட்டுவந்துள்ளது என்பதைத் தமிழர் வரலாறு கூறுகிறது. தமிழரின் மொழி, கலை, பண்பாடுபோன்ற உயிர்நாடியான சிறப்புக்கள் பலவும் பர்மிய மக்களின் சிறப்புக்களுடன் ஒன்றித்து, ஒருமை கண்டு, உறவு கொண்டு, தழைத்துத் துளிர்த்து வளர்ந்திருக்கிறது. தொடக்க காலத்தில் குடியேறிய தமிழருள் பெரும்பான்மையோர் தாயகம் திரும்பாமல், இந்நாட்டிலேயே தங்கி இந்நாட்டு மக்களாகவே வாழ்ந்து வரலாயினர். அவர்களின் வழித்தோன்றல்கள் இற்றைப் பர்மாவிலே எண்ணிக்கையில் 3 லட்சத்திற்குமேல் பல இடங்களில் சிதறி வாழ்ந்து வருகின்றனர்.

## அகில பர்மா தமிழர் சங்கத்தின் தோற்றம்

பர்மியத் திருநாட்டின் வளமான வாழ்விற்கும், உயர்வான முன்னேற்றத்திற்கும் உலக வரலாறு கண்ட காலந்தொட்டு,

உன்னத உழைப்பை உண்மையுடன் நல்கிய தமிழ்ப் பெருங்குடி மக்கள் பிறர் நலம்பேணி, தம் நலம் துறந்தனர். தமிழரினும் இந் நாட்டு அரசியல் மாறுதலுக்கேற்றவாறு தன் நிலையைச் சீர்ப் படுத்தி மற்றவர்களோடு தன்னையும உயர்த்திக்கொள்ளும் அள வில் சிந்தித்துச் செயலாற்றவே முனைந்தது. ஆனால் வெற்றி காணவில்லை. பர்மாத் தமிழர்களின் வாழ்க்கைத்தரம் நாளுக்கு நாள் தேய்வுகண்டது. அந்த நிலை இரண்டாம் உலகப் போருக் குப் பிறகும் மேலும் கவலைக்கிடமான வழியில் நலிந்துகொண்டே வந்தது.

இத்தருணத்தில் "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு" என்னும் எழுச்சி பெற்ற தமிழ்ப் பெரியார்களின் இடைவிடாத முயற்சியால் சாதி, சமய, கட்சிப் பாகுபாடின்றி தாய் மொழி தமிழாகக்கொண்ட தமிழர் இனத்திற்கோர் சங்கம் நிறுவத் திட்டமிட்டு 13-3-52-ல் **அகில பர்மா தமிழர் சங்கம்** தோற்றுவிக்கப்பெற்றது.

அன்றுமுதல் அனுபவமுள்ள பெரியோர்களாலும், ஆற்றல் மிக்க இளைஞர்களாலும் சங்கத்தின் பொறுப்பேற்கப்பெற்று ஐந்து ஆண்டுகளாக மொழி வளர்ச்சி, சமூக நலன், கஷ்ட நிவாரண உதவி இன்னும் மற்ற பல துறைகளிலும் அரிய தொண் டாற்றிவந்தனர். ஆறுவது ஆண்டு தொடக்கத்திலிருந்து சங்கத் தின் சேவை மேலும் வளர்ச்சியடைந்து, பர்மாவாழ் தமிழ் மக்களின் விழிப்பு உணர்ச்சியால் தங்களின் எதிர்கால வாழ்க் கைக்கு ஏற்ற—தன்மானத்துடன் வாழ, சங்கத்தின் சேவையை அதிகமாக்கி, அதற்கேற்ற பொறுமையும், கடமையும், கண்ணிய மும், அன்பும் ஒருங்கே அமையப்பெற்ற, பர்மியர்களுக்கும்— தமிழர்களுக்கும் மொழி வழியில் உறவாடுவதற்கேற்ற பர்மிய மொழியில் ஆற்றல் படைத்த ஒரு தலைவரை—உயர்திருவாளர் **எஸ். இலட்சுமணன்** அவர்களைத் தேர்ந்தெடுக்கப்பெற்று, அன் னாரின் தலைமையிலே இரண்டு ஆண்டுகளாய் அரும்பெரும் பணி கள் புரிந்து, தன்மானம் காக்கும் தமிழர்களுக்கோர் தனிக்கட் டிடமும் வாங்கி, அடுத்த ஆண்டுக்கும் அந்தத் தலைவரையே அன் புடன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்று, இன்னும் பல புதிய திட்டங்களையும் நிறைவேற்ற சங்கம் தயாராகிக்கொண்டு இருக் கிறது என்பதை மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்கிறோம். ஆறுவது, ஏழாவது ஆண்டுகளின் நிர்வாகத்தில் நடந்துள்ள பொது நலப் பணிகள் இவ்வறிக்கையில் இனி விவரிக்கப்பெறுகின்றன.

**அகில பர்மா தமிழர் சங்க நிர்வாகிகள்,**
**இரங்கூன்.**

தமிழ் வாழ்க

# அகில பர்மா தமிழர் சங்கம்

தலைமைக் காரியாலயம்

**109—113, லூயிஸ் வீதி, இரங்கூன்**

—:o:—

## ஆருவது ஏழாவது ஆண்டுகளின் அறிக்கை

### தலைவர் தேர்தல்

அகில பர்மா தமிழர் சங்கத்தின் புத்தாண்டுத் தலைவராக சாந்தா ஆர்ட் போட்டோ ஸ்டுடியோ அதிபர் உயர்திரு. எஸ். இலட்சுமணன் அவர்களை, திரு. வி. எச். டேவிட் அவர்கள் பிரரேபிக்க, திரு. ஆர். எம். இராமலிங்கத்தேவர் அவர்கள் ஆமோதிக்க ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்பெற்றது.

### வரவேற்புக்குழு

நமது அகில பர்மா தமிழர் சங்கத்தின் ஐந்தாவது ஆண்டு விழாவைச் சிறப்புடன் நடத்திவைக்க அமைக்கப்பெற்ற வரவேற்புக் குழுவில் திரு. வி. எச். டேவிட் பர்மா நாடு ஆசிரியர் அவர்கள் தலைவராகவும், திரு. அரு. காந்தி அண்ணுமலை அவர்கள் செயலாளராகவும் பதவியேற்று ஊக்கமுடனும் உற்சாகத்துடனும் பணியாற்றினுர்கள். ஆண்டு விழாவைச் சிறப்புடன் நடத்திக்கொடுத்த வரவேற்புக் கமிட்டியின் எல்லா அங்கத்தினர்கட்கும், நன்கொடை கொடுத்துதவிய அன்பர்கட்கும் பெரியார்கட்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

### ஐந்தாவது ஆண்டு விழா

அகில பர்மா தமிழர் சங்கத்தின் ஐந்தாவதாண்டு விழா 27–10–57ல் இரங்கூன் ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் பிற்பகல் 3. மணிக்குத்தொடங்கியது. பெருந்திரளான மக்கள் நிறைந்திருந்தனர். விழா நாதசுர மேளவாத்திய முழக்கத்துடன் ஆரம்பமாகியது. விழாவிற்கு மேன்மை தங்கிய இந்தியத் தூதுவர் கனம் லால்ஜி மொரோத்ரா அவர்களும், மற்றும் பல பெரியார்களும் வருகை தந்திருந்தனர். தமிழ் வாழ்த்து, தேசிய

கீதங்களுக்குப் பின் விழாவிற்கு வருகை தந்த எல்லோரையும் வரவேற்புக் குழுத் தலைவர் திரு. வி. எச். டேவிட் அவர்கள் வர வேற்று, சங்கம் ஆற்றியுள்ள பணிகளையும், இனி எதிர்காலத்தில் ஆற்றவேண்டிய பணிகளையும் குறிப்பிட்டு, புதிய தலைவர் உயர்திரு. எஸ். இலட்சுமணன் அவர்களை உவகையுடன் வர வேற்று வாழ்த்துக்கூறினர். அகில பர்மா இந்தியன் காங்கிரஸ் தலைவர் திரு. என். ஆர். பர்ஜோர்ஜி அவர்கள் விழாவின் துவக்க உரையில் "இங்குள்ள இந்தியர்களில் பெரும்பாலோரில் இத்தே சத்தின் தொழிலுக்கும், வர்த்தகத்திற்கும் தமிழர்கள்தான் முது கெலும்பாக இருக்கிறீர்கள். பர்மிய மக்களுக்கு உங்களது உழைப்பு அவசியம். இந்நாட்டுத் தலைவரி கியா. ஐம்பதைத் தாங்க முடியாத இந்தியர்களில் பெரும்பாலோர் தமிழர்கள்தான் என் பது தெளிவு. சுயமரியாதை மிக முக்கியமானது" என்று வற் புறுத்திக்கூறினர். சிறப்புரை வழங்கிய இந்தியத் தூதுவரவர்கள், கடல் கடந்த நாட்டில் வாழும் நாம் இந்தியர்கள் என்ற அடிப் படையிலே ஒன்றுபட்டு வாழவேண்டும் என்ற அவசியத்தைப் பற்றி வற்புறுத்திப் பேசினர்.

விழாச் செயலாளர் திரு. அரு. காந்தி அண்ணாமலை அவர் கள் விழாவின் நிகழ்ச்சிகளைச் சிறப்புற நடத்தித் தந்தார். அவ் வாண்டு பொதுச்செயலாளர் திரு. எஸ். கே. நாராயண அய்யர் அவர்கள் ஆண்டு அறிக்கையையும், தலைவர் திரு. சி. சிவபூஷணம் அவர்களின் வாழ்த்துரையையும் வாசித்தளித்தார்.

புத்தாண்டின் புதிய தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள், குழுமியிருந்த மக்களின் கைதட்டல் முழக்கத்திற்கிடை யே தலைமைப் பதவி ஏற்று தமது தலைமைப் பேருரையில் "ஒன்று பட்டால் உண்டு வாழ்வு நம்மில் ஒற்றுமை நீங்கிலனைவர்க்கும் தாழ்வு" என்ற கவி பாரதியின் பாடலுடன் ஆரம்பித்து, அகில பர்மா தமிழர் சங்கத்தைப் பலப்படுத்திப் பயன்பெறச் செய்வதற் குப் பல நல்ல கருத்துக்களைச் சான்றுடன் கூறி, சொற்பெருக் காற்றினர்.

அடுத்து உலகச் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்ட திருத் தணி திரு. ஜாண் அவர்கள் தமது பிரயாண அனுபவத்தை அழ காகவும் சுருக்கமாகவும் விவரித்துக் கூறினர். தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவெய்தியது.

# விழாக்கள்

## தமிழர் திருநாள் (பொங்கல் விழா) 13-1-58, 14-1-58.

பர்மா தமிழர்களின் வரலாற்றிலே மறக்க முடியாத அளவில் தமிழர் திருநாள் மாபெரும் விழாவாக 13-1-1958-ல் தெய்ண்பியூ மைதானத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் வண்ணம் பெரிய பந்தல் அமைத்து, நுழைவு வாயிலை அழகான வளைவுகளால் தமிழ்க்கொடிச் சின்னத்துடன் அலங்கரித்து, பார்ப்போரின் உள்ளம் உவகைகொள்ளும் அளவுக்கு விழாப் பந்தல் காட்சியளித்தது.

மாலை 4 மணிக்கு பர்மா அரசாங்க முன்னாள் பிரதமரும், மக்களின் அன்புக்குப் பாத்திரமான மேன்மை தங்கிய ஊநூ அவர்களை தமிழர்களின் பண்புக்கேற்பப் பூர்ணகும்ப மரியாதைகளுடனும், சாரணர்களின் அணிவகுப்புகளுடனும், மேளதாளத்துடன் கொம்பு முரசொலிக்க விழாக் குழுத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்களும், இதர தமிழ்ப் பெரியார்களும் மேடைக்கு அழைத்துவர, தமிழ்ப் பெண்மணிகள் ஆரத்தி எடுத்துக் குங்குமத் திலகமிட்டு, கொட்டுமுழக்கத்துடன் எக்காளம் தொனிக்க மேடைமீது அமர்த்திய காட்சியைப் பந்தலில் குழுமியிருந்த மக்கள் ஆரவாரமிட்டு பிரதமர் ஊநூ வாழ்க வாழ்கவென வாழ்த்தினர்.

பர்மிய தேசியக் கீதம், தமிழ் வாழ்த்துக்குப் பிறகு விழா ஆரம்பமாகியது. வயது முதிர்ந்த தமிழ் விவசாயி திரு. பக்கிரிசாமி சேதுராயர் அவர்கள் ஊநூ அவர்களுக்கு மலர்மாலை சூட்டினார். விழாக்குழுத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் பர்மிய மொழியில் தமிழர் பண்பாடு, நாகரீகம், கலை, கலாச்சாரம், இந்நாட்டின் தொடர்பு, இன்றைய சேவை முதலியவற்றை விளக்கிக்கூறி வரவேற்று வாழ்த்துக்கூற சங்கப் பொதுச்செயலாளர் திரு. வி. எச். டேவிட் அவர்கள் தமிழில் வரவேற்பிதழ் வாசிக்க, விழாக் குழுப் பொதுச்செயலாளர் திரு. எல். மெய்யப்பன் பி. காம். அவர்கள் ஆங்கிலத்தில் வரவேற்புரை வாசிக்க தலைவரவர்களால் பிரதமருக்குப் பொன்னாடை போர்த்தியபோது மக்களின் ஆரவாரம் விண்ணதிர முழங்கியது.

# வரவேற்பிதழ்.

## தமிழ்த்திருநாள் காணவந்த எமதரும் தலைவரே வருக! வருக!!

பொன்னும், மணியும், செந்நெலும், கன்னலும் விளைந்து வளந்தரும் பர்மிய நாட்டின் முதல் அமைச்சராகிய தாங்கள், எங்கள் தமிழ்த்திருநாளைத் துவக்கிவைக்கும் பெருமை கிடைத்தமைக்காக நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம். பர்மாவாழ் தமிழ் மக்கள் அனைவரின் சார்பாகவும் நல்வரவுகூறி நீடூழி வாழ்க என மனமுவந்து வாழ்த்துக் கூறுகிறோம்.

## உலகமெல்லாம் புகழும் உத்தமரே !

பதினாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட காலந்தொட்டே, தமிழரும், தமிழ் மொழியும், சீருஞ் சிறப்பும் பெற்று விளங்கிய வரலாற்றைத் தமிழ் இலக்கியங்களும், சான்றோர் நூல்களும், சரித்திரச் சான்றுகளும், சில சாசனம், புதைபொருள் ஆராய்ச்சி முதலியனவும் எடுத்துக்கூறுகின்றன. கலைச்சிறப்பும், மொழிச்சிறப்பும், கவினுறு நாகரிகச் சிறப்பும் கொண்டு வாழ்ந்த பண்டையத் தமிழர்கள், அலைகடல் பலவினும் பலகலம் செலுத்திக் கடாரம், சீனம், சாவகம், யவனம், ஈழம் முதலிய பல நாடுகட்குச் சென்று குடியேறித் தங்கள் உழைப்பால் அந்தந்த நாடுகள் வளம்பெற உதவி வந்தனர் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்ளுகிறோம்.

## புத்தர் நெறி வளர்க்கும் உத்தமப் பெரியோய் !

கடாரமென்றும், சுவர்ணபூமி யென்றும் சிறப்பித்துக் கூறப்பெறும் இப் பர்மாவுடன் ஆயிரமாயிரம் ஆண்டுகட்கு முன்னரே தமிழ்மக்கள் தொடர்புகொண்டு வாழ்ந்துள்ளனர். அவர்களில் சிலர், இந் நாட்டிலேயே தங்கி, இந்நாட்டு மக்களுடன் கலந்து, இந் நாட்டையே தாய்நாடாக எண்ணி வாழ்ந்துவரும் தமிழர் பரம்பரையைச் சேர்ந்த மக்களும் ஏராளமாக உள்ளனர் என்பது யாவருக்கும் தெரிந்ததேயாகும்.

## நன்னெறி வளர்க்கும் நற்பெரும் தலைவரே !

பொன் விளையும் இப்புண்ணிய நாட்டில் தமிழ்ப் பெருங்குடி மக்களில் பெரும் பகுதியினர்—உழவுத்தொழில் புரிந்து செந்நெல் விதைத்து பொன்மணி குவித்துத்தரும் இந்த உழவர்

பெருங்குடி மக்களிற் பலர்—பல நூறு ஆண்டுகளாகத் தாய் நாடு துறந்து பர்மாவையே தங்கள் சொந்த நாடாகக் கருதி வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிலருக்கு குடியுரிமை கிடைத்திருப்பினும், இன்னும் கிடைக்காமல் கவலையோடு இருப்பவர் பலர். அவர்களுக்கெல்லாம் விரைவில் குடியுரிமை வழங்கி இம்மக்களின் உழைப்பால் நாடு மேன்மேலும் செழிப்படையும் வண்ணம் நமது யூனியன் அரசாங்கம் கருணை காட்ட வேண்டுமென வேண்டிக்கொள்வதோடு, பர்மாவில் வாழும் தமிழர்கள் என்றென்றும அன்புடன் நாட்டிற்கு விசுவாசமாக பர்மியமக்களோடு சேர்ந்து பணியாற்றுவோம் என்று இதய பூர்வமாக உறுதி கூறுகிறோம்.

## மும்மணி போற்றும் எம்மருந் தலைவரே!

புத்தர் திருவடிபோற்றி புத்தம், தருமம், சங்கம் என்னும் மும்மணி வழிகளைக் கடைப்பிடித்து, அன்பு நெறி அற வழி பிறழாது நாட்டிற்குத் தொண்டாற்றி நல்லமைச்சராய் விளங்கும் தங்களைத் தமிழர் சமுதாயம் என்றென்றும் போற்றிப் போற்றிப் புகழ்ந்து வருமென்பதைப் பெருமித மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம். உழவர் திருநாளாகிய இத் தமிழ்த்திருநாளை, சாதி, சமயம், கட்சிப்பாகுபாடின்றி கலை, இலக்கியம், கலாச்சாரம், மொழிப்பண்பாடு ஆகியவைகளை வளர்க்கவும் பெருக்கவும் பயன்படும் இத்திருநாளைத் துவக்கி வைத்து, நல்லாசி கூறி, பர்மாவாழ் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கு ஊக்கம் தரும்படியான தங்கள் வருகைக்காக அன்பு கலந்த நன்றியும், வணக்கமும் செலுத்துவதோடு தாங்கள் பல்லாண்டு வாழ்க என மனமார வாழ்த்துகின்றோம்.

பிரதமர் ஊநூ அவர்கள் துவக்க உரை நிகழ்த்த எழுந்த போது அன்னாரின் மகிழ்ச்சிக்கோர் அளவில்லை. பர்மிய மொழியில் அன்பு ததும்ப தமிழர்கள் அளித்த வரவேற்புக்குப் பதில் கூறும் பொழுது, இவ்வளவு திரளான தமிழர் சமுதாயத்துடன் நேரடியில் தொடர்புகொள்ளும் வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, சுதந்திர பர்மாவில் வாழும் மக்களாகிய ஷான், கச்சின், சின், கரீன், நாகா, பலௌங், மோன் போன்ற பல திறப்பட்ட இன மக்களோடும் நெருங்கிய தொடர்பு கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டிருப்பதுபோலவே தமிழர்களின் தொடர்புக்கும்தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறி, இங்கு நிரந்தரமாக வாழும் தமிழர்களில் சிலருக்குப் பர்மா பிரஜா உரிமை கிடைத்துள்ளதெனவும், பல

ருக்கு இன்னும் கிடைக்கவில்லையெனவும் தெரிந்து கொண்ட தாகவும், இவர்களில் பர்மியர்களாகிய தமிழர்களுக்கு வாழ்த்துக் கூறி, பர்மிய மக்களோடு இணைந்து, இந்நாட்டின் வளர்ச்சிக் காகப் பர்மிய மக்களோடு தோளோடு தோள் கொடுத்து, இன்ப துன்பத்தில் கலந்துகொண்டிருக்கும் தமிழர்களைப் பர்மியர்க ளாகவே கருதுவதாகவும் கூறினர். இதுகாறும் பர்மாவில் வாழும் தமிழர்களைக் குறித்து எத்தகைய தேச நலவிரோதச் செயலும் என் காதுக்கு எட்டாது இருப்பது மகிழ்ச்சி தரும் செய்தி என் றும் குறிப்பிட்டார். நாட்டின் வளர்ச்சிக்காக எல்லோரும் ஒற்றுமையாகப் பர்மியத் தமிழர்களும் தங்களின் கடமையை நிறைவேற்ற வேண்டுமெனவும் வேண்டிக்கொண்டார்.

பர்மாவில் தமிழ் விவசாயிகளின் பெரும் உழைப்பை சுதந் திர பர்மா மறப்பதற்கில்லையெனவும், பெரும்பாலோர் விவசாயி களாக வாழும் இவர்களின் நலன் புறக்கணிக்கப்பட மாட்டா தெனவும், பர்மிய விவசாயிகளைப் போலவே குடி உரிமைப் பெற்ற பர்மா தமிழ் விவசாயிகளுக்கும் நிலப்பங்கீடு கிடைத்து வருவதாகவும், இதுவரை மனுச்செய்து கொண்டுள்ளவர்களுக்கு அவர்களுக்குரிய மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அவர்களுக் கும் நிலப்பங்கீடு கிடைப்பதற்கான முயற்சிகளைத் தனது சர்க்கார் கவனத்தோடு பரிசீலனை செய்வார்களென்றும், இந்தவிவசாயிகள் பர்மா பிரஜா உரிமை கோரிய மனுக்களின் மீது சர்க்கார் ஆவன செய்யத் தவறமாட்டார்களென்றும், தெரிவித்துக்கொண் டார். அரசியல் அளிக்கும் பர்மா பிரஜா உரிமையில் பாகுபாடு இல்லை—அல்லது இரண்டுவிதமாய்க் கவனிக்கப்படுமெனவும கூற இயலாது. பர்மிய நாட்டு மக்களுக்கும் பர்மா பிரஜா உரிமை பெற்றவர்களுக்குமிடையே பாகுபாடு காட்டுவதற்கில்லை. பர் மிய பிரஜைகளான தமிழர்கள் எவருக்கும் பாரபட்சம் காட்டப் பட்டால் அதனை சர்க்கார் கவனத்திற்குக் கொண்டுவரலாமென வும் கேட்டுக்கொண்டார்.

இங்ஙனமே இந்தியப் பிரஜைளாக இருக்கும் இந்தியர்—தமி ழர்கள் இந்நாட்டின் சட்டதிட்டங்களுக்குட்பட்டு இந்தியாவின் நல்லெண்ணத் தூதர்களாக இங்குவாழ வேண்டுமெனவும், தகாத செயல்களில் ஈடுபடுவது தவறுயென்பதை உணர்ந்து சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபடும் தவறைப்போக்கி, இந்தியா வின் கௌரவத்திற்கும், இத்தேச மக்களின் அன்புக்கும் உரித் தானபோக்கில் வாழ முயலவேண்டுமெனவும், பர்மாத் தமிழர்கள் சம்பந்தமாக நல்ல மகிழ்ச்சிதரும் செய்தியே கிடைத்தமைக்குத்




1. பிரதமர் ஊநூ அவர்களை மேடைக்கு அழைத்து வரும்பொழுது ஆரத்தி எடுக்கும் காட்சி.

2. பிரதமர் அவர்களுக்கு, தமிழ் விவசாயி திரு. பக்கிரிசாமி சேதுராயர் அவர்கள் மலர்மாலை சூட்டுதல்.

3. சங்கத்தலைவர் திரு எஸ். இலட்சுமணன் அவர்கள் ஊநூ அவர்களுக்கு வரவேற்புரை வாசித்து பேழை வழங்குதல்.

4. பொன்னாடையுடன் பிரதமர் அவர்கள் மனப்பூரித்து மக்களைக் கண்டு ஆனந்திப்பதும், தலைவர் அவர்கள் மரியாதை செய்வதையும், விழாச்செயலாளர்கள் திரு. எல். மெய்யப்பனும் அசாத் க. இராமசாமியும் பக்கத்தில் காணலாம்.

தனது நன்றி கூறி மகிழ்வதாகவும், தமிழர்கள் எல்லோரும் இனிது நீடூழி வாழப் பிரார்த்திப்பதாகவும், தெரிவித்துக்கொண்டார்.

இரண்டாம் நாள் விழா 14-1-58ல் தொடர்ச்சியாக இந்தியத் தூதுவர் அலுவலக முதற்செயலாளர் திரு. து. முருகேசன் எம். ஏ. அவர்கள் தலைமையில் பிற்பகல் 3 மணிக்கு ஆரம்பமாகி இரவு 1. மணிக்கு வெற்றிகரமாக முடிவடைந்தது. இந்த இரண்டு நாட்கள் விழாவிலும் கலை நிகழ்ச்சிகளும், சங்கீதம், நடனம், நாட்டியம், நாடகம், கும்மி, கோலாட்டம் இன்னிசை வாத்திய முழக்கத்துடனும், ஓவியம், கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகள் களியாட்டப்போட்டிகள் நடத்தி வெற்றிபெற்றவர்களுக்குப் பரிசுகள் வழங்கியும், இரண்டு நாட்கள் விழாக்களையும் பர்மா தமிழர்கள் பர்மிய மக்களுக்குத் தங்களுடைய கலை, கலாச்சார பண்பாட்டை எடுத்துக்காட்டும் நோக்கோடும், கூடிவாழும் நோக்கோடும், எதிர்கால தமிழர்களின் சந்ததிகளுக்கும் விழிப்புணர்ச்சியில்லாத மக்களுக்கும் உணர்ச்சியூட்டும் வண்ணமும் வெற்றிகரமாக நடத்திவைக்கப்பெற்றது.

மேற்கண்ட விழாவை விழாச் செயலாளர்கள் திரு. எல். மெய்யப்பன் பி. காம், அவர்களும், திரு. அசாத் க. இராமசாமி அவர்களும் நல்ல முறையில் நடத்திவைத்தார்கள். அவ்விழாவில் எல்லா நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்ட சகோதர சகோதரிகளுக்கும், இளைஞர்களுக்கும், குழந்தைகளுக்கும், பெரியார்களுக்கும் பந்தலின் நுழைவு வாயலில் அழகான வளைவுகள் (ஆர்ச்) அன்பளிப்பாக அமைத்துக்கொடுத்த தென்னிந்திய அச்சுத் தொழிலாளர் சங்கத்தாருக்கும், பூத்நாத் டெம்பிள் வெல்பேர் கமிட்டிக்கும் மின்சாரம், ஒலிபெருக்கி, மேடை அமைப்பு, அலங்காரம் அமைத்துக்கொடுத்த தோழர்களுக்கும், பொதுமக்கள் உட்காருவதற்கு அதிகமாக நாற்காலிகள் போட்டு அன்பளிப்பாகச் செய்துதவிய திரு. ஏ கே. லெட்சுமணன் அவர்களுக்கும், மோட்டார் வாகனங்கள் கொடுத்துதவிய பெரியார்களுக்கும், பாதுகாப்பு அளித்துதவிய சாரணர்கள், பியூசோட்டி படையினர்களுக்கும், தாகசாந்தி கொடுத்துதவிய பெரியார்களுக்கும், நாதசுரம் கொப்பு, குடை சுருட்டி வகையறுக்கள் தந்துதவிய அன்பர்களுக்கும், பொது ஸ்தாபனங்களுக்கும் விழாவைச் சிறப்பாக நடத்திக்கொடுத்த துணைக்குழுக்களின் செயலாளர்களுக்கும் பத்திரிக்கைகளில் பிரசுரம் செய்துதவிய பத்திராதிபர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், விழாவிற்கு நன்கொடை கொடுத்துதவிய

பெரியார்களுக்கும், பொங்கல் விழா மலர் உருவாக்கித் தந்த அன்பர்களுக்கும், விளம்பரம் கொடுத்துதவிய பெரியார்களுக்கும், வெளிநாடுகளிலிருந்து வாழ்த்துச்செய்தி அனுப்பியவர்களுக்கும், விழாவை வெற்றிகரமாக நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தந்துதவிய எல்லா பெரியார்களுக்கும், தோழர்களுக்கும், வாழ்த்து இதழ் அன்பளிப்பாக அச்சடித்துதவிய காந்தி பிரஸ் அதிபர் அவர்களுக்கும் இவ்விழாவைச் சிறப்பாக பர்மா தமிழர்கள் கொண்டாடுவதற்கு வழிகாட்டியாகயிருந்த மலாயா தமிழர்களுக்கும், குறிப்பாக தமிழ் முரசு ஆசிரியர் திரு சி. சாரங்கபாணி அவர்களுக்கும் நமது வணக்கமும், நன்றியும் உரித்தாகுக.

## தமிழர் திருநாள் (பொங்கல் விழா) 14-1-59, 15—1—59.

இவ்வாண்டு, இரண்டாவது ஆண்டு தமிழர் திருநாளை சென்ற முதலாவது ஆண்டின் சிறப்பிற்கு ஏற்றவாறு நடத்த வேண்டுமென்ற ஆர்வத்துடன் சங்க நிலையத்தில் விழாக்குழு அமைக்கப்பெற்றது. விழாக்குழுத் தலைவராக திரு. ஏ. எஸ். ஏகாம்பரம், செயலாளராக திரு. அசாத் க. இராமசாமி, பொருளாளராக திரு. அரு. காந்தி அண்ணாமலை உள்ளிட்ட பல துணைக் குழுக்களுடன் அமைக்கப்பெற்றது.

விழாவை அவுங்சான் களியாட்ட மைதானத்தில் (பி. ஏ. ஏ. மைதானம்) அலங்கார மேடை அமைத்து, 14—1—1959 மாலை 3-30 மணிக்கு தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் விழா ஆரம்பமாகியது. விழாவைத் துவக்கிவைக்க பர்மா யூனியன் சர்க்காரின் கலாச்சார அமைச்சரின் வாழ்க்கைத் துணைவியார் திருமதி ஊசிட்தவுங் அவர்கள் வருகைதந்தார்கள். சங்கத்தின் விசேட அழைப்பின்மீது சென்னை கலைமகள் ஆசிரியரும், முத்தமிழ்க் காவலருமான திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களும் வருகைதந்திருந்தார்கள். மேற்கண்ட இருவரையும் மைதான நுழைவு வாயிலிலிருந்து மேளதாளத்துடனும், ஆலவட்டம், சுருட்டி, குடையுடன் விழாத்தலைவர்களும், பெரியார்களும் அழைத்துவர, மேடைக்கருகில் மாதர் பகுதியினர் ஆரத்தி எடுக்க மேடையில் வந்து அமர்ந்த பொழுது மக்கள் ஆரவாரம் விண்ணதிர்ந்தது.

விழாக்குழுத்தலைவர் திரு. ஏ. எஸ். ஏகாம்பரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தியபின், விழாத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் திருமதி டோசிட்தவுங் அவர்களை வரவேற்று,

தமிழர் திருநாளின் சிறப்பைப் பர்மிய மொழியில் விளக்கிப்பேசினார். தமிழர் பண்பாட்டிற்கிணங்க திருமதி சிட்தவுங் அவர்கள் குத்து விளக்கேற்றி வைத்து, உழவர்களுக்குப் பெருமையளிக்கும் தமிழர்களின் பண்பைப் பாராட்டிப் பேசியதாவது:—

"நண்பர்காள், தமிழ் மக்களின் பண்பாட்டு விழாவிற்கு என்னை அழைத்தமைக்கு நன்றி. நானும் அதைப் பெருமையாகக் கருதுகிறேன். எந்த நாட்டிலும் சரி உழவர்களின் உழைப்பால் தான் தானியங்களை உற்பத்தி செய்யமுடியும். இந்தத் தானியமே நமது உணவாகும். உழவர்களுக்கு இந்தத் தானியத்தை உற்பத்தி செய்வதில் பல கஷ்டங்களுண்டு. சில சமயங்களில் கஷ்டங்கள் லேசாகவும், சில சமயங்களில் அதிகமாகவும் ஏற்படுவதுண்டு. ஆனால் கஷ்டங்களைக்கண்டு நாம் ஊக்கத்தை இழந்துவிடக்கூடாது. எவ்விதக் கஷ்டங்கள் ஏற்பட்டபோதிலும் பொறுமை என்னும் ஆயுதத்தால் சமாளித்து நமது காரியங்களை சாதிக்கவேண்டும். பல இன்னல்களுக்கிடையே மனிதன் பொறுமையைக் கையாண்டால் எதையும் சமாளிக்கலாம் என்பது எல்லா மதங்களின் சித்தாந்தமாகும். பொறுமைதான் மனிதர்களுக்கு மிக மிக அவசியம் என்பதை எல்லோரும் உணரவேண்டும்" என்று உளம்பூரித்து ஆசிகூறினார்கள்.

அடுத்தபடியாக திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு, பர்மாத் தமிழர்களின் சார்பில் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் கீழ்க்கண்டபடி வரவேற்பு இதழ் வாசித்தளித்தார்கள்.

**செந்தமிழ் கற்றுயர் நந்தமிழ்ப்பெரியோய்!**

வருக, வருக, உங்கள் வரவு நல்வரவாகுக என்று மனமார வாழ்த்தி வரவேற்கின்றோம். நந்தமிழ்த் திருநாளாம் இத்தைத்திருநாளிலே (பொங்கல் விழா) பர்மா வாழ் தமிழ்ப்பெருங்குடி மக்களிடையே உங்களைக்காண நாங்கள் இறும்பூதெய்துகிறோம்.

**பல்லோர் புகழும் சொல்நய நல்லோய்!**

பழந்தமிழ் இலக்கியப்பனுவல்கள் பல்லாயிரத்தை இன்றைள் தமிழில் எல்லோரும் ஏற்க இனிமையாய்த் துலக்கிவரும் தங்கள் தண்டமிழ்த்தெளிவை நினைந்து நினைந்து பேருவகை அடைகின்றோம்.

**கற்றறிந்தடங்கிய உத்தமப் பெற்றியோய்!**

தமிழ்ப் பெருங்காப்பியங்கள் தளர் நிலையடைந்து தன் உருச்சிதைந்து தாழ்ந்துறும் என்று ஏங்கிய காலையில் ஏட்டுச்

சுவடிகளை ஊர் ஊராய்த்தேடி அரும் பாடுபட்டு உருவாக்கித்தந்த நந்தமிழ்த் தந்தை டாக்டர் உ. வே. சுவாமிநாதப்பெரியாருடன் நீங்கள் ஆற்றிய பெரும் பணியின் திறனை என்றென்றும் தமிழகம் மறக்காது.

### நீத்தார் பெருமை ஏத்தும் நற்றவத்தோய்!

தனக்குவமையில்லாதான் தாள்சேர் வகையை பவக்கடல் கடக்கும் பண்பொடு நீங்கள் திறமையா யெழுதும் எழுத்தோவி யங்கள் கண்டு இன்புற் றகமகிழ்கின்றோம்.

### கலைமகள் ஏட்டின் தலைப்பணி செய்வோய்!

எல்லாம் வல்ல அருட்பெருஞ்சோதியின் தனிப்பெருங் கருணையால் தமிழ்த்திரு மகனும் நீங்கள் எல்லா நலன்களும் பெற்று நீடூழி வாழப் பிரார்த்திக்கின்றோம்.

முத்தமிழ்ச் செல்வர் திரு. கி. வா. ஜ அவர்கள் இருகரங் கூப்பி எல்லோருக்கும் வணக்கம் தெரிவித்து, உழவர் திருநாளின் சிறப்புப் பற்றியும், தமிழின் சிறப்புப்பற்றியும் ஆங்கிலத்தில் சில நிமிடங்கள் விளக்கியபின் தமிழில் ஒரு மணி நேரம் உணர்ச்சி பொங்கப் பேசியதாவது; "கதிர் போற்றி, கதிரவனைப் போற்றி, தமிழர்களின் இல்லமெல்லாம் பொங்கல் பொங்க, உங்கள் உள்ள மெல்லாம் மகிழ்ச்சியால் பொங்கும் இப்புனித பொன்னுளில் உங்களைக்காண அருள்புரிந்த எம்பிரானுக்கு எனது சிரம் தாழ்ந்த வணக்கம். பல தலைமுறைகளுக்கு முன்னுல் பர்மாவில் குடியேறி பர்மாவை வளப்படுத்திய உங்களைக் காணுவது எனது பெரும் பாக்கியம். பர்மாவின் தனிச்சிறப்புக்கு உரித்தான புத்த மதம் பாரத தேசத்திலிருந்து வந்தது என்பதை நினைக்கும்பொழுது தமிழர்களாகிய நாம் பெருமிதம் கொள்கிறோம். உலகம்போற் றும் காஞ்சிபுரத்தில்தான் சைவம் தழைத்தது. புத்தம் தழைத்தது. இன்னும் அங்குக் காணும் சைவ, புத்த ஆலயங்கள் நமக்குப் பெருமையூட்டுவதாக உள்ளன.

"தமிழர்களின் தனிச்சிறப்புக்கு உரித்தான இப்பொங்கல் பொன்னுள் யான் பெற்ற இன்பம் இவ்வையமெல்லாம் பெறுக என்ற தமிழர்களின் சிறந்த பண்பை உலகுக்கு உணர்த்துவ தாகும். இது நெய்ப் பொங்கல் மட்டுமல்ல, சர்க்கரைப் பொங் கல் மட்டுமல்ல, ஆனந்தப் பொங்கல், அற்புதப் பொங்கல். வாழ்வு பொங்க, நிலத்தில் நெல் பொங்க, அடியார்கள் அருள் பொங்க




1. திருமதி ஊச்சிட் தாங், திரு. கி. வா. ஜ இருவரையும், சங்கத்தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்களும், முன்னாள் தலைவர் திரு. ஆர். எம். ராமலிங்கத் தேவர் அவர்களும், திரு. பி. ஜி. சுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்களும், இன்னும் மற்ற பெரியார்களும் மேடைக்கு அழைத்துவரும் காட்சி.
2. தமிழ் வணக்கம் பாடும்பொழுது மேடையிலுள்ளவர்கள் மரியாதை செய்தல்.
3. திருமதி ஊச்சிட் தாங் அவர்கள் தமிழ் பண்பாட்டிற்கிணங்க குத்துவிளக்கேற்றி வைப்பதும், பக்கத்தில் விழாக்குழுத்தலைவர் திரு ஏ. எஸ். ஏகாம்பரம் அவர்களும்.
4. மேடையில், இந்தியத்தூதுவர் அலுவலக முதற்செயலாளர் திரு. து. முருகேசன் எம். ஏ. அவர்களும், திரு. கி. வா. ஜ அவர்களும், தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்களும், இந்தியத் தூதுவர் அலுவலக கான்சுலர் பகுதி முதற்செயலாளர் திரு. எப். எஸ். தேவார்ஸ் பி. ஏ. அவர்களும் வீற்றிருப்பதைக் காணலாம்.

னல்லோர் இல்லத்திலும் மகிழ்ச்சி பொங்க, கதிர்போற்றிக் கதிர வனைப் போற்றி, இறைவனைப்போற்றி, உழவனைப்போற்றி, உழைப்பைப்போற்றி, உலகமெல்லாம் இன்பம்பெறக் கொண்டாடும் புனிதப் பொன்னுள்தான் பொங்கல் விழா. இந்தப் புனிதப் பொங்கல் வைபவம், தமிழ் நாட்டில் மட்டுமல்ல தமிழர்கள் எங்கெங்கு வாழ்கிறார்களோ அங்கெல்லாம் கொண்டாடப்படுகிறது. இப்புனிததினத்தில் உங்கள் மலர்ச்சி முகத்தைக்காணும் பொழுது நான் தமிழ் நாட்டில் இருப்பதாகவே உணர்கிறேன்" என்றும், உலகின் முதுமொழி இரண்டே, உயிர் மெய்யெழுத்துக்கள், தமிழ் கூறும் தொல்காப்பியம், அக்காலப்போரும் இக்காலப்போரும், ஒன்றே முக்காலடி உயரமாளிகை திருக்குறள் என்ற பல அரிய பெரிய விளக்கங்களுடன் அழகாகப் பேசி முடித்தார். அதன்பிறகு, பிரபல வழக்கறிஞர் திரு. பி ஜி. சுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்கள் ஆங்கிலத்தில் உழவர் திருநாளின் பெருமையைப் பற்றி வெகு அழகாகப் பேசினர். களியாட்டப் போட்டி, பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு திருவாளர்களான எம். எஸ். முத்துச்சாமி நாடார், எம். ஆர். புருஷோத்தமன் ஆகியோர் அன்பளிப்பாகப் பரிசுகள் வாங்கிக் கொடுத்து, மேடையிலும் பரிசுகள் வழங்கினர்கள்.

15-1-59 இரண்டாம் நாள் விழா தொடர்ச்சியாக பிற்பகல் 4-மணிக்கு ஆரம்பமாகி இரவு 9 மணிக்கு முடிவடைந்தது. அன்றும் திரு. கி வா. ஜ. அவர்களின் இலக்கியப்பேச்சு மாட்டுப் பொங்கலின் மகத்துவம் பற்றியும், மாதர் குலத்தின் மாண்பு பற்றியும், புலவர்களின் அருமை பெருமை பற்றியும். குறுந் தொகைகூறும் கதைகளில் தமிழர்களின் பண்பைப் பற்றியும், கண்ணகியின் நன்னெறியையும், கம்பன் காவியத்தையும் இனிமையாகப்பேசினர்கள்.

இரண்டு நாள் விழாக்களிலும், இன்னும் பலருடைய பேச்சும், பாட்டும், பரதநாட்டியம், நடனம், தேகாப்பியாசம், நவீன நடனம், வில்லுப்பாட்டு, இன்னிசைவாத்தியம், நாடகம் முழங்க விழாச் சிறப்பாக நடந்து நிறைவெய்தியது.

விழாவிற்கு மைதானம் கொடுத்துதவிய அவுங்ஸான் களியாட்ட கமிட்டியாருக்கும், இதற்கு ஏற்பாடு செய்து கூடவேயிருந்து ஒத்துழைப்புக் கொடுத்து சேவை செய்த திரு. எச். ஹஸன் அவர்களுக்கும், மேடை அலங்காரம், ஒலிபெருக்கி, சீன் அமைப்பு செய்துகொடுத்த தோழர்களுக்கும், விழாவைத் துவக்கித்தந்த திருமதி சிட்தவுங் அவர்களுக்கும், இலக்கிய சொற்பெருக்காற்றிய திரு. கி வா. ஜெகந்நாதன் அவர்களுக்கும், விளையாட்டுப் போட்டி, பேச்சுப்போட்டி பரிசுகள் வாங்கிக் கொடுத்து வழங்கிய பெரியார்களுக்கும், வாழ்த்துப் பத்திரம் அன்பளிப்பாக அச்சடித்துதவிய காந்தி பிரஸ் அதிபர் திரு. ஆதி.

செல்லையா நாடார் அவர்களுக்கும், நிகழ்ச்சி நிரல் அன்பளிப்பாக அச்சடித்துதவிய பாரதி பிரஸ் அதிபர் என். எம். கணேசன் அவர்களுக்கும், விழாவில் பர்மிய தேசீய கீதம், தமிழ் வாழ்த்து பாட்டுப் பாடியவர்கள், பரதநாட்டியம், நடனம், கும்மி, நாடகம், சொற்பொழிவு, தேகாப்பியாசம், இன்னிசை, வில்லுப்பாட்டு நடத்திக்காட்டிய சகோதர சகோதரிகளுக்கும், இன்னும் மற்ற நிகழ்ச்சிகளுக்கு உதவிசெய்த நண்பர்களுக்கும், பெரியார்களுக்கும், விழாவிற்கு ஒத்துழைப்புக் கொடுத்து விழாவைச் சிறப்படையச் செய்த விழாக்குழு உறுப்பினர்களுக்கும், உபகுழுச் செயலாளர்களுக்கும், வரவேற்புக் குழு அங்கத்தினர்களுக்கும், தலைமைச் சங்க உறுப்பினர்களுக்கும், போஷகர்களுக்கும், நன்கொடை கொடுத்துதவிய பெரியார்களுக்கும், நண்பர்களுக்கும், வரவேற்பு அங்கத்தினர்களாகச் சேர்ந்து பெருமைப்படுத்திய பெரியார்களுக்கும், நண்பர்களுக்கும், விழாவிற்கு வருகைதந்த பொது மக்களை நல்ல முறையில் வரவேற்று, அமைதியை நிலைநாட்டி அன்புடன் சேவை புரிந்த வாலண்டியத் தோழர்களுக்கும், டல்லா பி. ஏ. பி. தோழர்களுக்கும், ஆரத்தி எடுத்து பெருமைப் படுத்திய மாதர் பகுதியினர்களுக்கும், நாதசுரக் குழுவினர்களுக்கும், குத்து விளக்கு ஆலவட்டம், சுருட்டி, குடை, ஜமக்காளம் கொடுத்துதவிய பொது ஸ்தாபனங்களுக்கும், பெரியார்களுக்கும், வாழ்த்துச் செய்தி அனுப்பிய வெளிநாட்டு, உள்நாட்டு அறிஞர்களுக்கும், பெரியார்களுக்கும், சங்கங்களுக்கும், விழாச் செய்திகளைப் பிரசுரம் செய்துதவிய ரஸிக ரஞ்சனி, தொண்டன், பர்மா நாடு, தந்தி ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும், விழாச் சிறப்படைய ஒத்துழைப்புத் தந்துதவிய தோழர்களுக்கும், பெரியார்களுக்கும், எங்கள் நன்றியும் வணக்கமும் உரித்தாகுக.

**திரு. கி. வா. ஜ. அவர்கட்கு விருந்தும், வரவேற்பும்.**

தமிழர் திருநாள் விழாவில் கலந்துகொண்ட திரு. கி. வா. ஜ அவர்களின் பேருரையைக்கேட்ட தமிழ் மக்கள் பெருமித உணர்ச்சிகொண்டு, இரங்கூன் நகரில் அமைந்துள்ள சகோதரச் சங்கங்களும், சமூகச் சங்கங்களும் தனிப்பட்ட அன்பர்களும் வரவேற்று, தேனீர் விருந்து அளித்து, தெவிட்டாத தமிழ் சொற்பொழிவுகளைக் கேட்டானந்தித்தனர். திரு. கி. வா. ஜ அவர்கட்கு ஓய்வு இல்லையென்றாலும் நகரமெங்கும் தமிழ் முழக்கம் தொனித்துக்கொண்டே இருந்தது என்றும் கூறலாம். பக்கோ, மோல்மேன், மாந்தலே நகரில் வாழும் தமிழ் மக்கள் வரவேற்று உபசரித்து தமிழின் இன்ப வெள்ளத்தில் மூழ்கி இருந்தனர். திரு. கி. வா. ஜ அவர்களுக்கு நமது சங்கச் சார்பில் 23-1-59-ல் மாலை 4-30 மணிக்கு ஸ்டிராண்டு ஹோட்டலில் தேனீர் விருந்து நடத்திவைக்கப்பெற்றது.

# கி. வா. ஜ அவர்கள் நமது சங்கத்திற்கு அளித்த சிறப்புக் கவிதை.

பாரத நாட் டினிற்றமிழ் மா நிலத்தி னின்றும்
பர்மாவை வந்தடைந்த தமிழர் கூடிச்
சீரதிகம் பெறச் சங்கம் ஒன்று நாட்டிச்
சிறப்புற்ருர்; அகில பர்மாத் தமிழர் சங்கம்
பேருடனே அதுவோங்கித் தமிழர் நன்மை
பெரிது மனம் கொண்டு தொண்டு செய்தல் கண்டேன்;
ஆகுமன்பின் ஆண்டுவிழா வதனிற் பேச
அழைத்தார்கள்; வந்துரையைச் சொன்னேன் மாதோ

சங்கத்தார் இந்தியரைப் பதிவு செய்து
சர்ட்டிபிகேட் டளிக்கின்ற தொண்டைப் பர்மாத்
துங்க அர சாங்கத்தார் இசைவும் பெற்றுச்
சொந்தமுறச் செய்கின்ருர்; அதனைக் கண்டேன்;
மங்கலிலா இவர் பண்பின் வகையை வாழ்த்தி
மகிழ்கின்றேன்; தமிழருக்குள் ஒன்றி வாழும்
தங்க இயல் பினை வளர்த்துப் பர்மா நாட்டார்
தாமும் ஒன்றி வாழு முறை காட்டு கின்ருர்

தண்டமிழி லன்பு கொண்ட அகில பர்மாத்
தமிழர் சங்கம் மேன்மேலும் சிறந்து வாழி!
தொண்டு பல செய்து நலம் காட்டும் அன்பர்
தொகுதி யெலாம் மிக வாழி! பர்மா நாட்டில்
மண்டுகின்ற பேரன்பர் தமிழர் பாலே
மனம் ஒன்றி அன்பு செய்து பழகி வாழி!
கண்டனவாய்க் காணுத பொருளாய் நின்ற
கடவுளருள் எவ்வி டத்தும் கலந்து வாழி

## சங்க நிர்வாகம்.

அகில பர்மா தமிழர் சங்கத்தின் நிர்வாகத்தை நேர்மையுடனும் திறமையுடனும் செயலாற்றுவதற்கு அமைந்துள்ள சங்க சட்ட திட்டங்களுக்கு ஏற்றவாறு 1957-58, 1958-59 ஆண்டுகளில், பேரவை, செயற்குழு, சங்க அபிமானிகள் கூட்டம் ஒன்றும், செயற்குழு கூட்டங்கள் 14ம், அவசர செயற்குழு கூட்டங்கள் 4ம், பேரவைக் கூட்டங்கள் 3ம், பொதுப் பேரவைக் கூட்டம் ஒன்றும் நடைபெற்றுள்ளன. சங்கத்தின் வேலைகள் யாவும் விரிவாகும் பொருட்டும், மக்களுக்கு முக்கியமான தேவையறிந்து சேவை செய்யும் பொருட்டும், சங்கத்திற்குத் தனிக் கட்டிடம் வாங்குவதின் பொருட்டும் இளைஞர் பகுதி, சாரணர் குழு, மாதர்பகுதி, கட்டிடக்குழு, எப். ஆர். சி. வேலைகளைக் கவனிப்பதற்காக தனிக் கமிட்டிகள் உருவாக்கப் பெற்று செயலாற்றி வந்தன. அதன் நோக்கங்கள் பின் தொடர்பில் காணலாம்.

## மேயர் நிவாரண நிதிக்கமிட்டி

இரங்கோன் நகர மேயரின் முயற்சியால் நிறுவப்பட்ட மேயர் நிவாரண நிதிக்கமிட்டியின் சங்கப் பிரதிநிதியாக பொதுச் செயலாளர் திரு. வி, எச். டேவிட் அவர்கள் தொடர்ந்து அங்கம் வகித்துப் பணியாற்றிவருகிறார்கள். தற்சமயம் நகரசபை கவுன்சிலர்கள் கலைக்கப்பட்டுவிட்டாலும், நகரசபையின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டுள்ள கர்னல் டூன்செய்ன் அவர்கள் தலைமையில் இந்த நிவாரண நிதிக்கமிட்டி இயங்குவது குறிப்பிடத் தக்கதாகும்.

## இளைஞர் பகுதி

நமது சங்கத்தின் சார்பில் தமிழ் இளைஞர்களின் முன்னேற்றம் குறித்து திரு. எச். ஹசன் அவர்களை செயலாளராகக் கொண்ட இளைஞர் பகுதியொன்று நிறுவப்பெற்று பல திட்டங்களை வகுத்துச் செயலாற்றப்பெற்றது.

இளைஞர் பகுதியின் சார்பில் கால் பந்தாட்டக்குழு ஒன்று அமைத்து திரு. ஆர். ஆர். நாகலிங்கத் தேவரவர்களின் ரோலிங் கப் டோர்ணமெண்ட் ஆட்டங்கள் சென்ற இரண்டு ஆண்டுகள் நடைபெற்றன. மூன்ருவது ஆட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

நமது சங்கத்தின் சார்பில், பி. ஏ. ஏ. கால் பந்தாட்டக்காரர் களுடன் நமது ஆட்டக்காரர்களையும் இணைப்பதற்காக பல வேலை கள் செய்து, பல ஆட்டங்கள் நடந்துகொண்டிருக்கின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிரேம்.

## சாரணர் குழு

அகில பர்மா தமிழர் சங்கச் சார்பில் நிறுவப்பெற்றுள்ள சாரணர் படை தொடர்ந்து, ஆசிரியர் திரு. எஸ். டி. ஆசீர்வா தம் அவர்கள் முயற்சியில் நல்ல பணிகளைச் செய்துவருகிறது. மேலும், இரங்கூன் மத்திய சாரணர் படையினருடனும், இன் னும் பல இயக்கங்களிலும், பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சேவை புரிந்துள்ளார்கள். நமது சங்கம் கொண் டாடிய தமிழர் திருநாள் விழாக்களில் பெரும் பங்கெடுத்துச் சேவை செய்தது குறிப்பிடத்தக்கதாகும்.

## மாதர் பகுதி.

நமது சங்கத்தின் மாதர் பகுதி, திருமதி ஆர். கோவிந்தம் மாள் பொறுப்பில் நடந்து வருகிறது. தமிழ்ச் சகோதரிகள் மாதர்பகுதியில் சேர்ந்து ஒத்துழைக்கக் கேட்டுக்கொள்கிரேம்.

ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்று உலகக் கணித மேதை என்று புகழ்பெற்று பர்மாவுக்கு வருகை தந்திருந்த குமாரி சகுந் தலா தேவி அவர்களுக்கு, சங்க மாதர் பகுதியினரால் 21-4-58ல் 49-வது வீதியில் அமைந்துள்ள சமரச சமாஜத்தில் இந்தியத் தூதுவர் காரியாலயத்தின் முதற்செயலாளர் திரு. து. முருகேசன் எம். ஏ. அவர்களின் துணைவியார் திருமதி சந்திரா முருகேசன் அவர்கள் தலைமையில் ஓர் வரவேற்புச் சிற்றுண்டி விருந்துபசாரம் நடத்திவைக்கப்பெற்றது.

மாதர் சங்கத் தலைவி திருமதி சீதாலெட்சுமி நாயகம் அவர் கள் பிரதம விருந்தினரான குமாரி சகுந்தலா தேவி அவர்களுக்கு மலர்மாலை அணிவித்து, வரவேற்புரை வாசித்தளித்து, பர்மாவில் செய்யப்பட்ட மரவைத்தட்டு ஒன்றும், இன்னும் சில அழகிய சாமான்களும், பர்மாவாழ் மாதர்களின் சார்பில் அன்பளிப் பாகக் கொடுக்கப்பட்டன.

பிறகு, ராதாபாய் சுப்பையர் அவர்கள் பாட்டும், மாஸ்டர் மோஹன் பரதநாட்டியமும், கோவை சகோதரிகளின் நாட்டிய மும் நடைபெற்றன. அகில பர்மா தமிழர் சங்கத் தலைவர் திரு.

எஸ். இலட்சுமணன் அவர்களால் மூன்று வெள்ளி மெடல்கள் அன்பளிப்பாக அளிக்கப்பட்டு, குமாரி சகுந்தலா தேவி அவர்களால் நாட்டியம் ஆடிய குழந்தைகளுக்குப் பரிசளிக்கப்பட்டது.

இறுதியில் சிற்றுண்டி வழங்கப்பெற்று, மாதர் பகுதி செயலாளர் திருமதி ஆர். கோவிந்தம்மாள் அவர்கள் வந்திருந்த அனைவருக்கும் நன்றிகூற கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

## (எப். ஆர். ஸி.) அந்நிய ரிஜிஸ்ட்ரேஷன் சம்பந்தமாய் சங்கம் ஆற்றிவரும் பணிகள்.

அந்நிய ரிஜிஸ்ட்ரேஷன் சம்பந்தமாக வருடாந்திரக் கட்டணம் செலுத்தி, அவைகளைத் திரும்பிப் பெறுவதில் இமிகிரேஷன் ஆபீஸில் ஏற்பட்ட பல தொல்லைகளைச் சங்கம் அறிந்து, அவைகளுக்கு எந்த வழியில் உதவி செய்யலாமென சங்கச் சட்ட ஆலோசகராகிய வழக்கறிஞர் திரு. பி. ஜீ. சுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்களும், சங்க முன்னாள் தலைவர் திரு. ஏ. எஸ். ஏகாம்பரம் அவர்களும், சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்களும் இமிகிரேஷன் ஆபீசர்களை அணுகி, அந்நிய ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிக்கெட்டுகள் திரும்பக் கிடைப்பதில் ஏற்படும் தாமதங்களையும் சிரமங்களையும் எடுத்து விளக்கங் கூறியபின், உயர்திரு. இமிகிரேஷன் கண்ட்ரோலர் அவர்கள், "வருடாந்திரக் கட்டணம் கட்டிய எப். ஆர். ஸி. களை சங்கத்திற்கு அனுப்பிவைத்து, இமிகிரேஷன் அதிகாரிகளால் அவைகளை சங்கத்திலேயே வினியோகிக்க ஏற்பாடு செய்வதாகவும், அதற்குச் சங்கமும் வேண்டிய உதவிகளைச் செய்துதர முடியுமா?" என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

அப்பணியை எதிர்பார்த்திருந்த சங்க நிர்வாகிகள் சங்கத்தின் மூலம் முழுப் பொறுப்பும் எடுத்துச் செயலாற்றுவதாக ஒப்புக் கொண்டு 31-3-58 முதல் சங்கக் காரியாலயத்தில் அந்நியர் ரிஜிஸ்ட்ரேஷன் சட்டிபிக்கெட்டுகள் வினியோகம் செய்யப் பெற்று வருகின்றன.

இதில் இந்தியர்கள் எல்லோருக்கும் பாகுபாடின்றி முடிந்த வரையில் வசதிகள் செய்துகொடுத்து வரிசைக்கிரமமாக எப். ஆர். ஸி. களை வினியோகித்து வரப்படுகிறது. இப்பணியை சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு. சு. ரா. வெ. காளிமுத்துப் பிள்ளை அவர்கள் எப். ஆர். ஸி. களை வரிசையாகக் கொடுக்

கும் ஒழுங்குமுறையைப் பொறுப்பேற்றுச் செயலாற்றி வரு வதில், சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் திருவாளர்களான ஏ. எஸ். ஏகாம்பரம், எஸ். சிதம்பரம் பிள்ளை மற்றும் பல அன்பர் களும் அவ்வப்போது கலந்து கொண்டு வேண்டிய உதவிகளைச் செய்து வருகிறார்கள். அன்னார்களுக்கும் சங்கம் தனது நன்றி யைத் தெரிவித்துக் கொள்கிறது.

மேலும், எப் ஆர். ஸி. விநியோகத்திற்காக எப். ஆர். டி. ஆபீஸிலிருந்து சங்கத்திற்கு வருவதிலும்–சில எப். ஆர். ஸி கள் தாமதமாகவும், மற்றும் பல பூர்த்தி செய்ய வேண்டியவைகள் விடுபட்டும் வருபவைகளையும், வெளிநாடு பயணத்திற்காக அவ சரமாகத் தேவைப்படுபவர்களுக்கும் அதில் ஏற்படும் பல சிரமங் களைக்கருதி இமிகிரேஷன் ஆபீசுக்கு உடனுக்குடன் கடிதம் மூலம் எழுதியும், நேரடியாகவும் சென்று ஆக்கவேலைகளைப் பணி யாற்றிவரும் சங்கத் துணைச் செயலாளர் திரு. ஆர். வி. ஜெகந் நாதன் அவர்களுக்கும், மற்றும் பல சிரமங்களைப் பொருட்படுத் தாது சங்கத்திற்கு வந்து பணிபுரியும் எல்லா உதவியாளர்களுக் கும் சங்கம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது. இது சம் பந்தமாக ஏற்படும் பல சிக்கல்களை உடனுக்குடன் கண்ட்ரோ லர் அவர்களிடமும், ஓ.எஸ் டி. என்னும் ஸ்பெஷல் ஆபீசரிடமும் தெரிவிப்பதில் சங்கச் சட்ட ஆலோசகர் திரு. பி. ஜி. சுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்கள் அதிகமாகப் பங்கெடுத்து உதவியுள் ளார்கள். அன்னார்க்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

அந்நிய ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிக்கெட்டுகளைச் சங்கப் பொறுப்பில் விநியோகித்து வரும் முறைகளை அடிக்கடி வந்து பார்வையிட்டுத் திருப்தியடைந்த உயர்தர இமிகிரேஷன் ஆபீசர் கள், எப். ஆர். ஸி யில் இடமாற்றம், திருமணப் பதிவு, குழந் தைகள் பதிவு மற்றும் அவ்வப்போது ஏற்படும் மாற்றம் திருத் தம் முதலியவைகளையும் நமது சங்கத்தின் மூலமாகவே செய்வ தற்கு அன்புடன் அனுமதித்தார்கள். அதன்படி சங்கமும் மேற் கண்ட பணிகளை ஏற்று சுமார் 8000 பேர்களுடைய எப், ஆர். ஸி. களில் வேண்டிய திருத்தங்களைத் திருத்தி–பதிந்து வாங்கி உரி யவர்களுக்கு விநியோகித்து வருகிறது. இப்பணியை பொறுப் பேற்று செயலாற்றிவரும் சங்க முன்னாள் பொருளாளரும், செயற்குழு உறுப்பினருமான திரு. எஸ். சிதம்பரம் பிள்ளை அவர்களுக்கும், அப்பகுதியில் பணியாற்றும் ஏனைய அன்பர் களுக்கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

## மைனர் குழந்தைகள் பதிவு

12 வயது முதல் 18 வயது வரையுள்ள குழந்தைகள் பதிவு செய்து கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் அறிவித்தவுடன், அது சம்பந்தமான பதிவு வேலைகளை நமது சங்கத்தின் சார்பாக 51வது வீதி, 98ம் நம்பரிலுள்ள ஹிந்து சோஷியல் கிளப் நிர்வாகிகளின் ஆதரவில்— கிளப் கட்டிடத்தில் ஆரம்பிக்கப்பெற்று குழந்தைகளின் பதிவு வேலை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. மேற்கண்ட பதிவு வேலைகளை பொறுப்பேற்று நடத்தும் சங்கச் சட்ட ஆலோசகர் திரு. பி. ஜி. சுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்களுக்கும், அப்பணிக்காக இடவசதி தந்துதவும் சோஷியல் கிளப் நிர்வாகிகளுக்கும், இப்பணியில் கலந்து பெரும் ஒத்துழைப்பு நல்கும் கிளப் நிர்வாக உறுப்பினர்களுக்கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

## போலியாகப் புதுப்பித்துக் கொடுத்திருந்த எப். ஆர். ஸி. கள்

தெங்காஞ்சூன், பவுட்டோ, லேடீங்கான்ரோடு, டாமூவேக் கலே பகுதிகளில் வாழும் இந்தியர்கள் பலரிடம் அப்துல் ரஷீத் என்பவர் பதிவுக்கட்டணத் தொகைகளை வாங்கிக்கொண்டு, தானே நேரடியாக ஆபீசில் கட்டிப் பதிவுச் செய்து வாங்கித் தருவதாகச் சொல்லி பலரை ஏமாற்றி, எப். ஆர். ஸி களுக்குப் பணம் கட்டிவிட்டதாக போலி முத்திரையும் கையெழுத்தும் போட்டுக் கொடுத்துவரும் செய்தி அரசாங்கத்திற்குத் தெரிந்து, மேற்படி அப்துல் ரஷீத் என்பவரைக் கைது செய்து விட்டார்கள்.

அரசாங்கம், போலி பதிவு முத்திரையுடன் வரும் எப். ஆர். ஸி. உடைமைக்காரர்களை மேல்நடவடிக்கை எடுத்துக்கொண்டு, சிலரைச் சிறையிலும் அடைத்துவிட்டார்கள். இச்செய்தி சங்கத்திற்குத் தெரிந்தவுடன் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்களும், வழக்கறிஞர் திரு. பி. ஜி. சுந்தரம் பி. ஏ. பி எல். அவர்களும் உயர்தர இமிகிரேஷன் ஆபீசரிடம் அணுகி, பொது மக்கள் பாமரர்களாதலால் அரசாங்கத்தை ஏமாற்றும் எண்ணத்துடன் செய்யவில்லை என்றும், பணம் கட்டி எப். ஆர். ஸிகளை திரும்பப் பெறுவதில் ஏற்படும் பல சிரமங்களைக்கருதி, மற்றவர்களை நம்பியதால் ஏமாற்றப்பட்டு விட்டார்களென்று பல விளக்கங்களை எடுத்துக்கூறி, அரசாங்கம் பரிசீலனைசெய்து ஏழை மக்கள் பால் இரக்கங்காட்ட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதிற்கிணங்க, போலி முத்திரையுள்ள எப். ஆர். ஸி களையெல்லாம்



அகில பர்மா தமிழர் சங்கத்தில் அந்நியர் ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிகெட் வேலைகள் செய்து கொடுப்பதையும், அதற்காகப் பொதுமக்கள் அமைதியாகக் குறிச்சியில் உட்கார்ந்திருப்பதையும் இப்படத்தில் காணலாம்.

திரும்ப வாங்கிக்கொண்டு, புதிதாக எவ்வித நடவடிக்கையுமில்லாமல் எப். ஆர். ஸி. களை அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. இச்சேவையில் நமது சங்கம் பெரும் முயற்சி செய்து நூற்றுக்கு மேற்பட்டவர்களுக்கு உதவியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

### கீமந்தான் சிம்லேப் பகுதியில் ஏற்பட்ட நெருப்பு விபத்தில் எரிந்துபோன எப். ஆர். ஸி. களின் சேவை

1957-ம் வருடம் ஏப்ரல் மாதம் 8ம் தேதியில் கீமந்தான் சிம்லேப் பகுதியில் ஏற்பட்ட நெருப்பு விபத்தில் அநேக இந்தியர்களின் எப். ஆர். ஸி—அந்நிய ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிக்கெட்டுகள் எரிந்துபோய்விட்டதால், அப்பகுதியில் அரசாங்க இமிகிரேஷன் இலாகா அதிகாரிகள் நடத்திய சோதனையில், பல தமிழர்களை எப். ஆர். ஸி கைவசம் இல்லையென்று கைது செய்து போலீஸ் நிலையத்தில் அடைத்து வைத்திருந்தார்கள். இச்செய்தி சங்கத்திற்குத் தெரிந்ததும் உடனடியாக ஜாமீனில் அழைத்துவர ஏற்பாடு செய்தும், மேல் நடவடிக்கைகளில்லாமலும் செய்துவிட்டதுடன், சம்பந்தப்பட்ட இலாகாவினரால் புது எப்.ஆர்.ஸி கள் வழங்கும்வரை பாதிக்கப்பட்டவர்களுக்குச் சங்கமுத்திரையுடன் இவர்களெல்லாம் நெருப்பு விபத்தின் அகதிகள் என அத்தாட்சியும் வழங்கப்பெற்றுள்ளது. இவ்விஷயமாக இந்தியத் தூதுவர் அலுவலகத்திற்கும், பர்மா அரசாங்க மந்திரி காரியாலயம் வரை சென்று முறையிட்டுக்கொண்ட பணியில் சங்கப் பொதுச்செயலர் திரு. வி. எச். டேவிட் அவர்கள் பெரும் முயற்சி எடுத்துக் கொண்டார்கள்.

### காந்தம் பகுதியில் எப். ஆர்.ஸி. சோதனையில் மக்களின் நிலை

இரங்கூன் காந்தம் பகுதியில் 1958ம் வருடம் நடந்த எப். ஆர். ஸி. சோதனையில் நூற்றுக்கணக்கான இந்தியர்கள் கைது செய்யப்பட்டார்கள். அவர்களையெல்லாம் போலீஸ் நிலையத்தில் ஜாமீனில் எடுப்பதில் நமது சங்கம் மிகவும் உதவியுள்ளது. இன்னும் அதில் பல கேஸ்கள் முடிவடையாமலிருப்பதால் அதற்காக வேண்டிய வழிகளில் சங்கம் உதவியளித்துக்கொண்டு வருகிறது.

## சங்கக் கட்டிடம்.

தாய்மொழி தமிழாகக்கொண்ட பர்மாவாழ் தமிழர்களின் பொது நிலையமான நமது சங்கத்திற்குத் தன் உரிமைபெற்றுத் தனிக்கட்டிடம் ஒன்று தேவை என்பதைக் கடந்த காலந்தொட்

டுப் பொதுப்பணியார்வமுள்ள பல பெரியார்கள் சிந்தித்து வந்தார்கள். அதற்குக் காரணம், இற்றைப் பர்மாவாழ் தமிழர்களின் நிலை மிகப்பயங்கரமாயுள்ளது என்பதை உணர்ந்தும், பர்மா அரசாங்கச் சட்டப்படி பர்மா பிரஜாவுரிமை பெருத—இல்லாத தமிழர்களின் எதிர்காலம், சாதாரண கூலியிலிருந்து பெரிய பதவி வகிப்பவர்கள் வரையிலும், வியாபார ரீதியிலும் தமிழர்கள்தான் அதிகமான பிரச்னைகளுக்கு வழிகாண வேண்டியவர்களாயிருப்பதால், சங்கத்தின் பணிகள் மிக மிக விரிந்துகொண்டேயிருக்கும் நிலையில் விசாலமான இடம் தேவை என்று நினைத்ததில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

வியாபாரம், பொருளாதாரத்தின் சூழ்நிலைகள் இந்தியர்களுக்குச் சரியில்லாதிருப்பினும், நமது சங்கத்தின்பாலும், தமிழர்கள் நலனிலும் பேரன்புகொண்ட சங்கப் போஷகர்களான திருவாளர்கள் ஆர் வேணுகோபால் ரெட்டியார், இ. வெள்ளைச்சாமித் தேவர், வை. மு. முத்துக்குமார் நாடார் போன்றோர்களும், பர்மா நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும் கட்டிடம் வாங்குவதில் பேரன்புக் காட்டினார்கள்.

முன்னாள் தலைவர்களான திருவாளர்கள் ஆர். எம் இராமலிங்கத் தேவர், ஏ. எஸ். ஏகாம்பரம், சு. ரா. வெ. காளிமுத்துப் பிள்ளை ஆகியவர்களும், சங்க உறுப்பினர்களான திருவாளர்கள் தி. சண்முகத் தேவர், எஸ். சிதம்பரம் பிள்ளை, சங்கத் துணைத் தலைவர் திரு. எஸ். செல்லையா நாடார், சங்கப் பொருளாளர் திரு. ஏ. கே. இலட்சுமணன், பொதுச்செயலாளர் திரு. வி.எச். டேவிட், துணைச் செயலாளர் திரு. ஆர். வி. ஜெகனாதன் மற்றும் பல பேரன்பர்களின் விடாமுயற்சியால், சங்க அலுவலகம் பணி புரிந்துவந்த, ஓாயிஸ் வீதி, 109-113ம் நம்பர் கட்டிடத்தையே (35x60 உள்ள பிரீஹோல்ட் நிலம் உள்பட) கியா 33500க்கு, 1. சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன், 2. டாக்டர் என். ராஜன், 3. திரு. எஸ். எஸ். செபஸ்தியான் உடையார் இந்த மூன்று பேர்களின் பெயரால் கிரயம் வாங்கி முடிந்தது.

சங்கக் கட்டிடத்தின் அடித்தளத்தைப் புதுப்பித்தும், கட்டிடம் வாங்கவும் பெரிதும் உற்சாகத்துடன் கியா 17500 கொடுத்துதவிய திரு. ஆர், வேணுகோபால் ரெட்டியாரவர்களின் தயாளக் குணத்திற்காக, அன்னாரின் தந்தையார் ஞாபகார்த்தமாக, கட்டிட அடித்தளத்தை "டாக்டர், ராஜா எஸ். இராமநாத ரெட்டியார் மண்டபம்" என்று பெயர் வைத்து வழங்கிவருவது என சங்க நிர்வாகக் குழுவில் முடிவு செய்யப்பெற்றது.

சங்கக் கட்டிடத்தை மேலும் இரண்டு மாடிகளைக் கட்டி மூன்று மண்டபங்களாக ஆக்கிவிட்டால், பர்மாவாழ் தமிழர்களுக்கு இன்னும் வேண்டிய பணிகளைச் செய்ய வசதியளிக்கும். என்ற ஆசை ஒவ்வொரு தமிழருக்கும் மனதில் ஆழப்பதிந்திருக்கிற தென்பதை சங்க நிர்வாகிகள் உணர்கிறார்கள். ஆனால், செயல் முறையில் உதவவேண்டிய பொறுப்பும் கடமையும் தமிழ்ப் பெருமக்களிடம்தான் உள்ளது என்பதை அன்புடன் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளளோம். இந்தப் பெரும் பணியில் கலந்து கொண்ட எல்லோருக்கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

கட்டிட நிதிக்கும், சங்கப் பணிகள் பற்றியும் பர்மாத் தமிழர்களுக்கு உணர்ச்சியையூட்டி, ஆர்வத்தைப் பெருக்கி, நற்சேவை செய்துவரும தினத்தாள்களான ரஸிக ரஞ்சனி, தொண்டன் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும். வார இதழ்களான பர்மா நாடு, தந்தி ஆசிரியர்களுக்கும சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

## திருவள்ளுவர் திருநாள் 11-6-57, 12-7-58

11-6-57ல் சங்க நிலையத்தில் சொல்லின் செல்வர் திரு. சாமி சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் திரு. பழ. சண்முகம், திரு. மு. முத்துராமலிங்கம் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

12–7–58ல் சங்க நிலையத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் திரு. நா. சி. நாச்சியப்பா அவர்கள் தமிழ் வணக்கம் பாட, திருவாளர்களான நாரா. நாச்சியப்பன், கரு. நாச்சியப்பன், கே.கே.எஸ். அப்துல்ரகிமான் ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்

## தேசியகவி பாரதியார் நினைவுவிழா, 11-9-57, 11-9-58.

11-9-57ல் சங்க நிலையத்தில் திரு. ஜி, பி. சார்லஸ் எம். ஏ. டி. டி. அவர்கள் தலைமையில் திருவாளர்களான விருதை எம். எம். யாகூப், எஸ். ரெங்கன், கு. சுப்பையா முதலியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

11–9–58-ல் சங்க நிலையத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் திரு. வே. ஆசீர்வாதம் தமிழ் வணக்கம் பாட, திருவாளர்களான அசாத் க. இராமசாமி,

மு. முத்துராமலிங்கம், ஆகியோர் சொற்பெருக்காற்றினர். இடையிடையே திரு. வே. ஆசீர்வாதம், திரு. கருப்பையா சைமன், திரு. ஈசூப் ஆகியோர் பாரதியார் பாடல்களை இசையுடன் பாடினர். இவ்விழாவிற்கென ஏற்படுத்திய கட்டுரைப்போட்டியில் கலந்துகொண்ட 19 அன்பர்களில், கட்டுரைப் பரிசீலனைக் குழுவின் சார்பாக 1. ஏ. கிரகோரி, 2 பி. ஆர். ஜெயராமன், 3. சி. கோமகன், ஆகிய மூன்று கட்டுரையாளர்களுக்கு சங்கத் தலைவர் அவர்களால் முறையே புத்தகங்களாகப் பரிசுகள் வழங்கப்பெற்று விழா இனிதே முடிவடைந்தது.

**வீரபாண்டியக் கட்டப்பொம்மன் நினைவு விழா.**

**20—10—57, 20—10—58.**

20-10-57ல் சங்க நிலையத்தில் சங்கப் பொதுச்செயலாளர் திரு. வி. எச். டேவிட் அவர்கள் தலைமையில், திருவாளர்களான அரு. காந்தி அண்ணாமலை, ப. ரா. ஹரிகிருஷ்ணன் ஆகிய இருவரும் சொற்பெருக்காற்றினர்.

20-10-58ல் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் திருவாளர்களான வேங்கைமார்பன், ஏ. வீரபத்திரன், அசாத். க. இராமசாமி முதலியோர் சொற்பெருக்காற்றினர்.

**வ. உ. சிதம்பரனுர் நினைவு விழா. 18-11-57, 18-11-58.**

18-11-57ல் சங்க நிலையத்தில் சங்கத்தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் திருவாளர்களான மு. சேதுராமன், மா. வேலு, அசாத் க. இராமசாமி முதலியோர் சொற்பெருக்காற்றினுர்கள். இவ்விழாவிற்கென ஏற்படுத்திய கட்டுரைப்போட்டியில் பரிசு பெற்றவர்கள் திரு. விருதையாகூப், முதற்பரிசு, திரு. மு. சேதுராமன் இரண்டாம் பரிசு, திரு. ந. அழகப்பன் மூன்றும் பரிசு, இப்பரிசுகளை முறையே திரு. எம். ஆர். புருஷோத்தமன் அதிபர் நேஷனல் லெதர் ஒர்க்ஸ், திரு. ஆர். முனியாண்டி, திரு. ஏ. இராமச்சந்திரன் அதிபர் நேரு பிரஸ், பரிசுக்குரிய புத்தகங்களை வழங்கினர்.

18-11-58ல் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் திருவாளர்களான பழ. சண்முகம், கே. ஏ. எஸ். மரைக்காயர், பி. ஏ., ஆகிய அன்பர்கள் பேச

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சி. அவர்களின் நினைவு விழா சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

---

## விருந்துபசாரம்.

தமிழகத்திலிருந்து இவண் வருகை தந்த திரு, ராம. பெ. நா. அருணசலம் செட்டியார் அவர்கட்கும், திரு. சி.மெ. சுப்பிரமணியஞ் செட்டியார் அவர்கட்கும், சங்கச் சார்பில் 6–2–58ல் தேநீர் விருந்துபசாரம் நடத்திவைக்கப்பெற்றது. அவ்வமயம் பர்மாவில் தமிழர்களிடையே ஒற்றுமையை வளர்த்து கல்வி, கலை, கலாச்சாரத்துக்காகப் பாடுபட்டுழைத்து வரும் சங்கத்திற்கு முறையே கியா 501ம், கியா 201ம் நன்கொடை அளித்தமைக்கு, சங்கத்தலைவர் திரு எஸ். இலட்சுமணன் அவர்கள் தமிழர்கள் பால் கொண்டுள்ள அபிமானத்தைக்குறித்து அன்னவர்களைப் பாராட்டிப் பேசினர்.

அகில உலக இளைஞர் மன்றத்தின் ஆசியாப் பகுதிச்செயலாளர் திரு. என். கிருஷ்ணசாமி அவர்கள் உலகச் சுற்றுப் பிரயாணத்தை ஆரம்பித்து, பர்மாவிற்கு வருகை தந்துள்ளதை முன்னிட்டு, பர்மாவாழ் தமிழ் இளைஞர்களின் சார்பில் கௌரவிக்கும்பொருட்டு, சங்க இளைஞர்களின் சார்பாக 27–2–58-ல் சங்கத் தலைவரவர்கள் தலைமையில் ஓர் வரவேற்புக் கூட்டம் நடத்தி வைக்கப்பெற்றது.

சங்கப் பொருளாளர் திரு. ஏ. கே. இலட்சுமணன் அவர்கள் தாயகம் செல்ல விருப்பதை யொட்டி, அன்னவர்க்கு 2-4-58ல் சங்கச் சார்பில் சங்கத் தலைவரவர்கள் தலைமையில் ஓர் பயணோபசார விருந்து நடத்திவைக்கப்பெற்றது.

சங்கத் துணைத் தலைவர் திரு, எஸ். செல்லையா நாடாரவர்கள் தாயகம் செல்வதை முன்னிட்டும், செயற்குழு உறுப்பினர் திரு. எஸ். எஸ். செபஸ்தியான் உடையார் அவர்கள் ஐரோப்பாவிற்குச் சுற்றுப்பிரயாணம் செய்வதை முன்னிட்டும் சங்க நிலையத்தில் 23-5-58ல் தலைவரவர்கள் தலைமையில் அன்னவர்களுக்கு தேநீர் விருந்துபசாரம் சங்கச் சார்பில் நடத்திவைக்கப்பெற்றது.

சங்கச் சார்பில் சங்கத்தலைவர் திரு. எஸ். லெட்சுமணன் அவர்கள் முயற்சியில், சங்கப் போஷகர்களில் ஒருவரான பிரபல வர்த்தகர் உயர்திரு. இ. வெள்ளைச்சாமித் தேவர் அவர்கள் தலைமையில் 10-9-58ல் சங்க நிலையத்தில், சங்கம் செய்துவரும்

சேவைகளை விவரித்துக்காட்டும் முறையிலும், தமிழர்களுக்காகத் தனிக்கட்டிடம் தேவை என்ற முறையிலும், தமிழர் சமுதாயப் பேரியார்களுக்கும், இதர தலைவர்களுக்கும் ஓர் சிற்றுண்டி விருந்துபசாரக் கூட்டம் நடத்திவைக்கப்பெற்றது.

அகில பர்மா தமிழர் சங்கச் சார்பிலும், ஹிந்து சோஷியல் கிளப் சார்பிலும் சென்னை ஹிந்து ஆங்கிலப் பத்திரிகையின் பிரதிநிதி திரு. கே. ரெங்கசாமி எம். ஏ. அவர்கட்கு 2-11-58ல் ஹிந்து சோஷியல் கிளப்பில் ஓர் வரவேற்புத் தேனீர் விருந்துபசாரம் நடத்திவைக்கப்பெற்றது.

அவ்வமயம், பர்மா வாழ் தமிழர்களின் இற்றை நிலைமைகளைப்பற்றிய மகஜர் ஒன்றை தயாரித்து அன்னாரிடம் கொடுத்து, அதற்காவன செய்யும்படி வேண்டிக்கொள்ளப்பட்டது.



2—11—58 மாலை, ஹிந்து சோஷியல் கிளப் கட்டிடத்தில், மேற்படி நிர்வாகிகளும் அகில பர்மா தமிழர் சங்கத்தாரும் சேர்ந்து, இரங்கூனுக்கு வருகை தந்திருந்த, சென்னை ''ஹிந்து'' பத்திரிகையின் பிரதிநிதி திரு. கே. ரெங்கசாமி எம். ஏ. அவர்களுக்கு தேனீர் விருந்தொன்றை நடத்திவைக்கப்பெற்றது. வலது புறத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் மலர்மாலை யணிவித்து மரியாதை செய்வதையும், சங்க முன்னாள் தலைவரும், ஹிந்து சோஷியல் கிளப் தலைவருமான திரு. சி. எஸ். பூஷணம் அவர்கள் வரவேற்புரை வாசிப்பதையும், இடது புறத்தில் திரு. ரெங்கசாமி அவர்கள் சொற்பொழிவாற்றுவதையும், காணலாம்.

# சென்னை "ஹிந்து" பத்திரிகையின் பிரதிநிதி திரு. கே. ரெங்கசாமி எம். ஏ. அவர்களிடம் சமர்ப்பித்த மகசர்.

**பர்மாவில் தமிழர் நிலை**

பர்மா தேசம் ஆங்கிலேயர் ஆளுகைக்குட்பட்டு, இந்தியாவின் ஒரு மாகாணமாக இருந்த காலத்திலேயே இந்தியர்கள்-குறிப்பாக தென்னிந்தியர்கள் எவ்வித கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் சொந்த நாட்டில் ஒரு பகுதியில் சென்று குடியேறுவது போல் பர்மாவிலும் குடியேறினர். பர்மாவில் தற்போது இந்தியர்களின் எண்ணிக்கை சுமார் ஏழு லட்சம் பேர்கள் வரை இருக்கலாமென மதிப்பிடப்படுகிறது. இவர்கள் பர்மா முழுவதிலும் பரந்து வசிக்கின்றனர். இவர்களில் தென்னிந்திய மக்களில் தமிழ் மொழி பேசுபவர்களின் எண்ணிக்கை மட்டும் நாலு லட்சம் பேர்கள்வரை இருக்கும். தலை நகரான இரங்கூனில் மட்டும் 2 லட்சம் தமிழர்கள் வசிக்கின்றார்கள்.

**வாழ்க்கை நிலை**

தலை நகரான இரங்கூனில் வசிக்கும் தமிழர்கள் பெரும்பாலும் சிறு சிறு வியாபாரமும், கடின உழைப்பான கை வண்டி இழுத்தல். சாமான்களை ஏற்றி இறக்குதல், அன்றாட கூலித் தொழில் செய்தல் இவைகள்தான் இவர்களின் ஜீவனத் தொழில்கள். ஜில்லாப்புரங்களில் வசிப்பவர்கள் விவசாயமும், அந்த ஜில்லா நகரில் கிடைக்கும் கடின உழைப்புகளாலும்தான் ஜீவனம் செய்கிறார்கள்.

**பர்மிய நாடு சுதந்திரம் அடைந்ததின் பிறகு**

பர்மா தேசம் பூரண சுதந்திரம் அடைந்ததின் பிறகு, அந்நியர் என்ற நிலையில் இந்தியர்களிடம் அரசாங்கம் கண்டிப்புக் காட்டத் தொடங்கியது. அதாவது, பர்மா பிரஜையாகாத எவருக்கும் அரசாங்கத்தில் எந்த உத்தியோகமும் வகிக்க இடமில்லை. வியாபார ரீதியில் எந்த சலுகையும் கிடைக்கவோ அல்லது கோரவோ முடிவதில்லை. இந்நிலையில் 1956ம் ஆண்டு அக்டோபர் முதல் 18 வயதுக்கு மேற்பட்ட எந்த அந்நியராக இருந்தாலும், வருடம் ஒன்றுக்கு 25 கியா தலைவரி கட்ட வேண்டுமென்று சட்டம் வந்தது. அதன் பிறகு 1957ம் ஆண்டு முதல் அது

இரட்டிப்பாக கியா 50 கட்டிவர வேண்டுமென்று சட்டம் திருத்தப்பட்டது. இவைகளினுல் பாதிக்கப்பட்டவர்கள் முக்கியமாகத் தமிழர்கள்தான். ஏழை இந்தியர்கள் அந்தந்தத் தவணைப்பிரகாரம் தாங்கள் செலுத்த வேண்டிய வரிப்பணம் செலுத்த முடியாததால் பெரும்பான்மையான மக்கள் குறிப்பாகத் தென்னிந்திய மக்கள் கைது செய்யப்பட்டு போலீஸ் நிலையத்தில் அடைத்துவைக்கப்பட்டு ஜாமீன் வாங்கிக்கொண்டு விடுதலை செய்யப்படுகின்றது. அந்தக் கேஸ் கோர்ட்டுக்குப் போனவுடன் அபராதம் கியா 15 லிருந்து 35 கியா வரை செலுத்தியாகவேண்டும். அபராதம் செலுத்தத் தவறினுல் ஜெயிலுக்கு அனுப்பி விடுவார்கள். இந்தியர் என்ற நிலையில் மிகச் சொற்பமான 10 சதவிகிதத்தினரான ஒரு சிலர் மட்டும் கொஞ்சம் வசதியாக வாழுகின்றனர்.

மேலே கூறப்பட்டவர்களில்—அதாவது 7 லட்சம் இந்தியர்களில் குறைந்தது 5 லட்சம் பேர்களாவது பர்மாவில் பிறந்தவர்களாக இருக்கின்ருர்கள். பாக்கி 2 லட்சம் இந்தியர்களும் இந்தியாவில் பிறந்து பர்மாவில் நிரந்தரமாக வாசம் செய்பவர்கள் என்ற நிலையிலுள்ளவர்கள்.

இப்போதைய நடைமுறை சிரமங்கள், ஏழை இந்தியர்களைப் பொருத்தவரை பர்மாவும் இந்தியாவும் ஒன்றுதான் என்று கருதிவந்தனர். இப்பொழுதும் கருதுகின்றனர். ஏனென்ருல் அரசியல் சுதந்திரம் இல்லாது, தயவில் கிடைக்கும் கூலி வேலைகளைப் பார்த்து கஷ்ட ஜீவனம் செய்துவரும் நிலையிலுள்ளவர்கள் எங்கு கஷ்டப்பட்டாலென்ன என்று இந்த நாட்டிலேயேத் தங்கிவிட்டனர்.

பர்மிய அரசாங்கம் எவ்வளவோ பெருந்தன்மையுடன், உரிமையுள்ள எல்லோரும் பர்மியப் பிரஜையாக மனுச் செய்து கொள்ளுங்கள் என்றுதான் சொன்ஞர்கள். ஆனுல் மக்களுக்கு அந்தச் சமயம் அப்படிப்பட்ட அவசியத்தன்மையை விளங்கிக் கொள்ளவும், விளக்கிவைக்கவும் வசதியில்லாமற் போய்விட்டது. பிரஜாவுரிமைக்காக இதுவரை மனுப்போட்டிருப்பவர்கள் சுமார் இருபதாயிரம் இந்தியர்கள்தான் இருக்கலாம். அதுவும் இன்னும் ஒப்புக்கொண்டபாடில்லை.

**இந்திய சர்க்கார்**

இந்திய சர்க்கார், இந்தியர் என்று பர்மிய அரசினால் வழங்கப்பட்ட அந்நிய ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிக்கெட் வைத்தி

ருப்பவர்களுக்கெல்லாம், இந்தியன் பாஸ்போர்ட் வழங்கிவந்தது அதனால் பர்மா பிரஜாவுரிமைக்கு மக்கள் உற்சாகம் காட்ட முடியவில்லை. விடுதலைபெற்ற நாட்டில் இப்படியே எவ்வளவு நாட்கள் காலம்கழிக்க முடியும் என்று எவரும் எடுத்துச்சொல்ல வில்லை. பர்மாவில் பெரும்பாலான இந்தியர்கள் கல்வி வசதி யில்லாதவர்களாகவும், சிந்தித்து முடிவுகட்ட சக்திபெற்றிருக் கவுமில்லை.

பர்மாவில் இந்தியர்களுக்கென்று ஒரு பொது ஸ்தாபனம் ஆல் பர்மா இந்தியன் காங்கிரஸ் என்றிருக்கிறது. அது இன்னும் நல்லவிதமாகச் சேவைகளைச் செய்யலாம். ஆனால் இந்திய மக் களின் உண்மைத் சேவையறிந்து சேவை செய்யக்கூடிய அளவு வளர்ச்சியடைய வேண்டும்.

### அகில பர்மா தமிழர் சங்கம்

1952ம் ஆண்டு முதல் பர்மாவின் தலை நகரான இரங்கூனில் நிறுவப்பட்டு, ஜில்லாப்புரங்களில் 14 கிளைகளுடன் தமிழர் சங்கம் சேவைசெய்து வருகிறது. தமிழர்களில் பெரும்பான்மையான வர்களின் ஆதரவு அதற்கு உண்டு. அதன் இப்போதைய அங்கத் தினர்களின் எண்ணிக்கை 14000க்குமேல் இருக்கிறது.

### பர்மாவாழ் இந்தியர்களின் மிக மிக முக்கியமான பிரச்சினைகள்

1. இந்திய வம்சா வழியிலும், பிறப்பாலும் இந்தியா விலே பிறந்து இங்கு வந்து வசிப்பவர்களுக்கு தாயகம் செல்ல வேண்டுமென்றால், முன் இந்தியத் தூதவர் காரி யாலயம் வழங்கி வந்ததுபோல் இந்தியன் பாஸ்போர்டை பர்மாவில் உள்ள இந்தியத் தூதுவர் காரியாலயம் வழங்கி வர வேண்டும்.

1.அ. அவர்கள் இந்தியாவில் பிறந்து, இங்கு வந்து வசிக் கிறார்கள் என்பதற்கு, பர்மிய சர்க்காரால் 1949ம் ஆண்டு முதல் வழங்கப்பட்ட அந்நிய ரிஜிஸ்ட்ரேஷன் சர்ட்டிபிக் கேட்டில் கண்டிருக்கிறது. அவ்வமயம் இந்திய சர்க்கார் பாஸ்போர்ட் வழங்க எவ்வித தடையும் விதிக்கவில்லை. ஆனதால் வேறு கருத்தைக்கொண்டு அப்போதே நாங்கள்-இந்தியப் பிரஜை, இந்தியாவில் பிறந்தோமென்று எழுதி வைத்திருக்க முடியாது.

1.ஆ. தாய் தந்தை இந்தியப் பிரஜையாக இருந்து, அவர்களின் குழந்தைகள் பர்மாவில் பிறந்தவர்களாகவும், அவர்கள் திருமணமாகாதவர்களாகவும் இருந்தால் அப்படிப்பட்டவர்களுக்கும் தாய் தந்தைகூட இந்தியா செல்ல விரும்பும் போது இங்குள்ள இந்தியத் தூதுவர் காரியாலயம் நேரடியாகவே பாஸ்போர்ட் வழங்கவேண்டும்.

2. பெரும்பான்மையாக வசிக்கும் தமிழர்களின் குழந்தைகள், சென்னை யுனிவர்சிட்டியுடன் தொடர்புகொண்டு மெட்ரிக் பரிட்சையை எழுத அனுமதிக்கவேண்டும். ஏனென்றால், இப்போது கல்கத்தா யுனிவர்சிட்டி ஒன்றுக்கு மட்டும்தான் பர்மாவிலிருந்து பரீட்சை எழுத முடிகிறது. சென்னை யுனிவர்சிட்டிக்கும் பரீட்சை எழுத முடிந்தால் தான் தமிழர்களுக்கு வசதிப்படும். ஏனெனில், பாடப்புத்தகம், படிப்பு முறை, தாய்மொழி இவைகளை கற்பதற்கு இயலும். பெரும்பான்மையாக வசிப்பவர்கள் தமிழர்களாக இருப்பதால் கல்வி விஷயத்தில் இந்திய சர்க்கார் இந்த உதவியைச் செய்தால்தான் தமிழ்க்குழந்தைகளின் படிப்பு ஓரளவாவது உயரமுடியும்.

3. சென்னை—இரங்கூன் நேரடிக் கப்பல் போக்குவரத்து நடைபெருததால், சென்னை மாகாணத்திற்குப் போய்வர வேண்டிய தமிழர்கள் மிகவும் அவதிப்படுகிருர்கள். இங்கு பர்மிய அரசாங்கம் போக்கு வரத்துச் செலவுக்கென்று 100 ரூபாய் இந்திய கரன்சி மட்டும் அனுமதிக்கிறது. இன்கம்டாக்ஸ் கட்டிவரக்கூடியவர்களுக்கு மட்டும் விசேடப் பிரயாண டிராப்ட் கிடைக்கிறது. ஆனல், சாதாரணமாக நடுத்தரக் குடும்பத்தினர்கள் மிகுதியாயுள்ள பர்மாவாழ் தமிழர்கள் ஒன்றுமே சொல்ல வகையறியாமலும், தங்கள் சொந்த நாட்டிற்குச் சென்று சுற்றத்தார்களைப் பார்த்துவர முடியாமலும் தவிக்கின்ருர்கள். எனவே, நேரடியாக சென்னை—இரங்கூன் கப்பல் போக்குவரத்து ஏற்பட வேண்டியது அவசியம். அப்படிப் போய்வர வியாபார ரீதியில் இணங்காவிட்டால், சென்னை–அந்தமான்–இரங்கூன், இரங்கூன்–அந்தமான்–சென்னை வழியிலாவது கப்பல் போக்குவரத்து அவசியம் நடைபெற வேண்டும்.

4. ஒருக்கால் கப்பல் போக்குவரத்து சுலபமில்லை என்ருல், சென்னை–விசாகப்பட்டினம்–இரங்கூன் நேரடி விமானப்போக்குவரத்தாவது நடைபெற வேண்டும்.

5. இந்தியப் பிரஜையாகவுமிருந்து, இந்தியப் பாஸ் போர்ட்டும் வைத்திருப்பவர்கள் ஒரேயடியாக பர்மாவைக் காலி செய்துகொண்டு போகும் சமயம் அவரவர் அணிந் திருக்கும் நகைகள், தட்டுமுட்டுச் சாமான்களை எடுத்துக் கொண்டு செல்வதற்கு, பர்மிய அரசாங்கத்துடன் இந்திய அரசாங்கம் நட்புறவில் பேசி அநுமதி பெறச்செய்ய வேண் டும். இப்போதையச் சட்டம் 250 கியா பெறுமானமுள்ள நகைகள்தான் அணிந்து செல்லலாமென்றிருக்கிறது. பர் மாவில் இந்தியர்கள் பல வருடங்கள் உழைத்தும், தங்கள் நாடு திரும்பும் பொழுது வெறுங்கையுடன் செல்ல வேண் டியதிருக்கிறது. இந்த அவல நிலையை இந்திய அரசாங்கம் பர்மிய அரசாங்கத்துடன் நேரடியாகவோ, அல்லது இந் யத் தூதுவர் காரியாலயத்தின் மூலமாகவோ பேச்சு வார்த்தை நடத்தி சுமூகமான முறையில் ஒரு முடிவுக்கு வந்து, பர்மாவில் வசித்துவரும் இந்திய அந்நியர்களுக்கு—முக்கியமாக தமிழர்களுக்கு ஒரு ஏற்பாட்டைச் செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

## திரு. கே. ரெங்கசாமி எம். ஏ. அவர்களின் பதில்

மேற்கண்ட மகசருக்குப் பதில் அளிக்கையில் திரு. கே. ரெங்கசாமி எம். ஏ. அவர்கள் கூறியதாவது:—"இங்குள்ள காங் கிரஸ், தமிழர் சங்கம் போன்ற ஸ்தாபனங்கள், பர்மா தேசத்தில் வசியும் நம் மக்களின் நிலைமைகளைப் புள்ளி விபரத்துடன் சேகரிக்க ஏற்பாடுகள் செய்வது உசிதமாகும். இங்குள்ள இந்தி யர்களின் நில நஷ்டயீடு, பிரஜாவுரிமை, இந்தியன் பாஸ்போர்ட், கப்பல் போக்குவரத்து முதலிய பிரச்சினைபற்றிய விபரங்களை நான் கூடுமானவரையில் புரிந்துகொண்டேன். இப்பிரச்சினைகளை இந்தியாவிலுள்ளப் பொது மக்களும், சர்க்கார் அதிகாரிகளும் உணருமாறு என்னால் இயன்றவற்றைச் செய்வேன்.

பர்மாவில் வசியும் சீனர்களின் சுபீட்சவாழ்வுக்கும், தொழிலபிவிருத்திக்கும் இங்குள்ள சீன பாங்கிகளும், தனவந்தர் களும் பொருள் உதவி செய்கின்றனரென எனக்குத் தெரிய வந்தது. இதுபோன்ற முறையை இங்குள்ள இந்தியர்களும் ஏன் கடைப்பிடிக்கக்கூடாது. இந்தியர் அநேகர் தமது பணத்தை இந்தியாவுக்கு அனுப்பமுடியாமல் ஏராளமான பணத்தை

அப்படியே மூட்டைகட்டி வைத்துள்ளனரே! இப்பணத்தைக் கைத்தொழில்போன்ற காரியங்களில் மூலதனமாகப் போட்டாலும்சரி, அல்லது தேவைப்படும் இந்தியருக்கு உதவியாகக் கொடுத்துதவினாலும்சரி அம்மக்களுக்குப் பெரும் சேவையாக இருக்கக்கூடுமே. பெரும் பணத்தை முடக்கி வைத்துக்கொண்டு விழிக்கும் இந்தியர், சீனரைப்போன்று தமது இனத்தின் அந்தஸ்து உயர்வுக்கான தொழில்களை ஏன் ஆரம்பிக்கக்கூடாது" என தெரிவித்தார்.

(மேற்கண்ட மகசருக்குப் பதில் தெரிவிக்கும் முறையில், சென்னை ஹிந்து பத்திரிகையின் திரு. கே. ரெங்கசாமி அவர்களின் எழுத்தோவியம், 25-11-58ல் பர்மா தமிழ்த் தினசரி ரஸிக ரஞ்சனியில் விபரமாகப் பிரசுரிக்கப்பட்டிருந்தது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.)

---

இந்தியத் தூதுவ அலுவலகத்தின் கான்சுலர் இலாக்காவில் முதற்செயலாளராகப் பணியாற்றிய திரு. எஸ். பி. முக்கோபாத்தியாயா அவர்கள் தாயகம் செல்வதையொட்டி பிரிவுபசாரமும், அன்னவருக்குப் பதிலாக இவண் வருகை தந்துள்ள முதற்செயலாளர் திரு. எப். எஸ். தேவார்ஸ் அவர்களுக்கும். திரு. ராஜ்குமார் அவர்களுக்கும் சங்கச் சார்பில், சங்க நிலையத்தில் 4.11-58ல் சங்கத் தலைவரவர்கள் தலைமையில் வரவேற்பு விருந்துபசாரம் நடத்திவைக்கப்பெற்றது.

சங்க முதலாண்டுத் தலைவர் திரு ஆர். எம். இராமலிங்கத் தேவர் அவர்கள் தாயகம் செல்வதாலும், சங்கத்தில் கடந்த ஆறு ஆண்டுகளாகத் துணைச்செயலாளராகப் பணியாற்றி வரும் திரு. ஆர். வி. ஜெகந்நாதன் அவர்கள் தாயகம் செல்லவிருப்பதையொட்டியும் சங்கச் சார்பில் அன்னவர்களுக்கு சங்கத்தலைவரவர்கள் தலைமையில் 9-2-59ல் ஓர் பயணோபசாரச் சிற்றுண்டி விருந்துபசாரம் நடத்திவைக்கப்பெற்றது.

அவ்வமயம் தலைவரவர்களுடைய முடிவுரையில், "தமிழ்த் தாத்தா மகாமகோபாத்தியாயா உ. வே. சாமிநாதய்யர் அவர்களைப்போல் பர்மாவிலும் தமிழுக்குச் சேவை செய்யவிருக்கும் நம் தாத்தா வை. மு. அவர்களைப்பற்றியும், அவரது சேவைகளைப் பற்றியும் நாம் பாராட்டாமலிருக்க முடியாது. கம்பையிலுள்ள நாடார் மகாஜன சங்கத்திற்குச் சொந்தமான தோட்டத்திலே, தமிழ்க் குழந்தைகளுக்கு 'போர்டிங் ஸ்கூல்' ஒன்றை நிறுவி

அதற்கு வேண்டிய ஆக்கத்தையும் ஊக்கத்தையும் கொடுத்துத் தமிழ் மக்களுக்குச் சேவை செய்யப் பெரிதும் கேட்டுக்கொள்கிறேன்.

"அடுத்து, இங்குள்ள எல்லாத் தமிழர்களும், குறிப்பாகத் தொழில் துறைகளில் ஈடுபட்டுள்ள பல தமிழ்ப் பிரமுகர்களும் உடனே கூடிக் கலந்து தமிழர்களுக்கென தமிழ்ச் சேம்பர்—ஆப்—கமர்ஸ் என்ற நிறுவனத்தை நிறுவி அதன் மூலம் பெறுதற்கரிய சாதனங்களைப் பெற்று, கௌரவமாக முன்னேறி நல்ல முறையில் அனுபவிக்க முயற்சித்துக்கொள்வதுதான் இன்றைய நிலையில் மிகமிகப் புத்திசாலித்தனமாகும்" எனக் குறிப்பிட்டார்.

சங்கச்சார்பில் இந்தியத் தூதுவர் காரியாலயத்தின் முதற் செயலாளர் திரு. து. முருகேசன் எம் ஏ. அவர்கள் குடும்பத்துடன் தாயகம் செல்லவிருப்பதை முன்னிட்டு 27-3-59ல் சங்க நிலயத்தில் சங்கத் தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்கள் தலைமையில் ஓர் பயணோபசார சிற்றுண்டி விருந்து நடத்திவைக்கப்பெற்றது.

பிரதம விருந்தினர் திரு. து. முருகேசன் அவர்களைப்பற்றி பல பெரியார்கள் பேசியபின், வழக்கறிஞர் திரு. பி. ஜீ. சுந்தரம் பி. ஏ. பி. எல். அவர்கள் பேசியபொழுது, "பர்மாவில் வாழும் தமிழர்களுக்குப் பல சங்கடங்கள் தோன்றியுள்ளன. இவற்றில் எப். ஆர். ஸியை வருடாவருடம் புதுப்பிக்க 50 ரூபாய் செலுத்துவது ஏழை மக்களுக்கு மிகக் கஷ்டமாக இருக்கிறது. வாழ்க்கை நடத்தவே வருமானமின்றித் தத்தளிக்கும் எளிய மக்களுக்கு இந்தத் தொகை மிகப்பெரிதாகயிருக்கிறது பொதுவாகப் பர்மாவில் எப். ஆர். ஸிக்குப் பணம் செலுத்தும் தமிழர் சுமார் ஒரு லட்சம் பேர் இருக்கலாம். அதாவது இவர்கள் மூலம் 50 லட்ச ரூபாய் கிடைக்கிறது. காஷ்மீருக்காக வருடாவருடம் 300 கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யும் இந்திய சர்க்கார் இவ்வேழை மக்கள்பால் ஏன் கருணைகாட்டக்கூடாது என்பதுதான் இங்குள்ளோரின் கேள்வி. இவர்கள்பால் கருணைகாட்ட திரு. முருகேசன் அவர்கள் முயற்சி எடுக்கவேண்டும். தவிர, பர்மாத் தமிழ் மாணவர்களின் 'மெட்ரிக்' பரீட்சையை அங்கீகரித்துக்கொள்ள, சென்னை சர்க்காரை இங்குள்ள எஸ். பி. ஜீ. பள்ளியினர் எவ்வளவோ பிரயாசையுடன் கேட்டுக்கொண்டும் பலனில்லை இது விஷயத்திலும் திரு. முருகேசன் அவர்கள் முயற்சிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்" என்று பேசினார்.

பாராட்டுக்கு நன்றி தெரிவித்து திரு. முருகேசன் அவர்கள் பேசியபோது, இங்கு இந்தியர்களுக்கு மட்டும் கஷ்டம் ஏற்படவில்லை, பர்மிய மக்களும் கஷ்டப்படுகின்றனரென்றும், உலகமே மாறுதலடைந்து வரும் இக்காலத்தில் இவ்வித மாறுதல் ஏற்படுவது இயல்புதானென்றும், இங்குள்ள சட்ட திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியது ஒவ்வொரு இந்திய மக்களின் கடமை என்றும், அப்படி நடப்பவர்களுக்கு ஏதாவது இன்னல்கள் ஏற்பட்டால் அவர்களுக்கு ஆதரவளிக்க இந்திய சர்க்கார் தயங்கமாட்டார்களென்றும், 'மெட்ரிக்' பரீட்சையை சென்னை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாததற்குத் தன்னால் இயன்றவரை முயற்சி செய்வதாக உறுதி கூறி, இங்குள்ள தமிழ் மக்கள் தன்னை ஒரு தமிழன் என்ற ரீதியில் இவ்வளவு அன்பாகவும் ஆதரவாகவும் நடந்து கொண்டதை என்றுமே மறப்பதற்கில்லையென்றும், எந்த நாட்டில் தாம் வசித்தாலும் பர்மாவாழ்த் தமிழர்களுக்குத் தன்னால் இயன்ற கடமையைச் செய்யப் பின்வாங்கப் போவதில்லை எனவும் தெரிவித்தார்.

## அனுதாபச் செய்தி

சென்னை கவர்னராகப் பதவிவகித்த திரு. ஏ. கே. ஜாஷ் அவர்கள் கடந்த 1-10-57ல் மறைவு குறித்தும், கலைவாணர் திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் கடந்த 30-8-57ல் மறைவு குறித்தும், இந்திய சர்க்காரின் கல்வி, கலாச்சார அமைச்சரும், தேச பக்தரும், மாபெரும் தலைவர்களில் ஒருவருமான மௌலானா அபுதுல்கலாம் அசாத் அவர்கள் 21-2-58ல் மறைவு குறித்தும், சங்கம் ஆரம்பம் முதல் நெருங்கிய தொடர்புள்ளவரும், சங்க அமைப்பாளர்களில் ஒருவரும் சொல்லின் செல்வர் என்ற பெயரால் தமிழர்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அறிஞருமான திரு. சாமி சோமசுந்தரம் அவர்கள் 19-4-58ல் தாயகத்தில் காலமான விபரம் அறிந்ததும் சங்கத்தில் அனுதாபக் கூட்டங்கள் கூட்டுவித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியதோடு அவர்களின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தனைகளும் செய்யப்பெற்று, சங்க அனுதாபச் செய்திகளை அன்னார் குடும்பத்தினர்களுக்கும் தெரிவிக்கப்பெற்றது.

## கிளைச் சங்கங்கள்.

அகில பர்மா தமிழர் சங்கத்தின் கிளைச்சங்கங்கள் ஏற்கனவே, மாண்டலே, மோல்மேன், பக்கோ, பவுண்டே, பியோப்புவே, புரோம், டல்லா, கம்மாகச்சி, கம்பை, தெங்காஞ்

ரூண், சவுட்டான், ஜெயாவாடி, டாங்கோ, தக்கி, ஈந்தட்டா, ஆகிய இடங்களில் பணியாற்றி வருகின்றன. இவ்வாண்டில் கையானில் 27-7-58 தேதியில் சங்கத்தலைவர் திரு.எஸ். இலட்சுமணன் அவர்களும், பொதுச்செயலாளர் திரு. வி. எச். டேவிட் அவர்களும், துணைச் செயலாளர் திரு. ஆர். வி. ஜெகநாதன் அவர்களும், திரு அசாத். க. இராமசாமியும், பாஸீனில் 14-12-58 தேதியில் சங்கத்தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்களும், முன்னாள் தலைவர் திரு. ஏ. எஸ். ஏகாம்பரம் அவர்களும், பொதுச்செயலாளர் திரு. வி. எச். டேவிட் அவர்களும் சென்று புதிதாகக் கிளைச்சங்கங்கள் அமைத்து வந்துள்ளார்கள். தமிழ் மக்கள் மிகுதியாக வதியும் பகுதிகளில், அந்தந்தப்பகுதி மக்களின் நலன் கருதி, பெரியார்களும், இளைஞர்களும், முயற்சி செய்து, நமது சங்கத்தின் கிளைச் சங்கங்கள் அமைத்து, தலைமைச் சங்கத்தின் தொடர்புடன் பணியாற்றி, எதிர்காலத்தில் பர்மா வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் தலைநிமிர்ந்து பெருமையுடன் வாழ இப்பொழுதே வழி வகுத்துக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

## வாசகசாலை

நமது சங்க நிலையத்தில், தமிழ் மக்களின் நலன்கருதி வாசகசாலையொன்று ஏற்படுத்தி நடந்துகொண்டிருக்கிறது. சென்னையிலும், இரங்கோனிலும் வெளியாகும் நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள் முதலிய பத்திரிகைகளையும், இரங்கோனிலுள்ள பல தேசத் தூதுவராலயங்களிலிருந்து அனுப்பிவைக்கப் பெறும் அறிக்கைகளையும், வெளியீடுகளையும் தமிழன்பர்கள் வந்து படித்துப் பயனடைகிறார்கள்.

### பத்திரிகை நன்கொடையாளர்கள்

சங்க வாசகசாலைக்குக் கீழ்க்கண்ட அன்பர்கள் நன்கொடையாகப் பத்திரிகைகள் அளித்திருக்கும் விபரங்கள் வருமாறு:—

1. "ரஸிக ரஞ்சனி" தினப்பத்திரிகை, திரு. கே. எஸ். பொன்னையாப்பிள்ளை அவர்கள்.
2. "தொண்டன்" " திரு. எம். கே. எம். இபுறுகிம் அவர்கள்
3. "பர்மா நாடு" தமிழ் / "எக்ஸ் பிரஸ்" ஆங்கிலம் } வார இதழ்கள் திரு. வி. எச். டேவிட் அவர்கள்

4. "தந்தி" வார இதழ் திரு. வா. து. சாம்பசிவம் அவர்கள்
5. "கார்டியன்" ஆங்கிலம் நாளிதழ் திரு. மணி அவர்கள் மெர்க்கண்டைல் பாங்க்
6. "கத்தோலிக்கு சேவை" மாத இதழ், கத்தோலிக் சேவை சங்கம் காந்தம்

## நூல் நிலையம்.

நமது சங்க நூல் நிலையத்திற்குச் செயலாளர், திரு. ஆர்.வி. ஜெகநாதன் அவர்களும், துணைச் செயலாளர்கள் திருவாளர்களான; மா. வேலு, கே. ஆர். தேவராசன் ஆகியவர்கள் நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். நூல் நிலையத்தில் அங்கத்தினர்களாகப் பதிவு செய்ய விரும்புவோர்கள் அதற்குரிய பாரத்தைப்பெற்று பூர்த்திசெய்து கொடுத்து வருடச் சந்தாவையும் செலுத்திச்சேர்ந்து கொண்டால், அவரவர்களுக்குத் தேவைப்படும் புத்தகங்களை ரிஜிஸ்டரில் பதிவு செய்து கையொப்பமிட்டு வாங்கிப் போய்ப் படித்துப் பயனடையலாம்.

அதற்கு வேண்டிய வசதிகளையும் நமது நூல் நிலையத்தில் செய்து வைக்கப்பெற்றுள்ளது. எல்லோரும் பயனடையும் வண்ணம் இலக்கண இலக்கியங்கள், சமூகம், விஞ்ஞானம், கதை, கட்டுரைகள், ஆராய்ச்சி, சரித்திரம் முதலிய பல்வேறு துறைகள் சம்பந்தப்பட்ட நூல்கள் தொகுத்து வைக்கப்பெற்று, தமிழ்ப் பெருமக்கள் அவ்வப்போது வந்து படித்து மகிழ்ந்து வருகின்றனர்.

தமிழன்பர்கள் இந்நூல் நிலையத்தைப் பயன்படுத்திக்கொள்வதோடு, தங்கள் தங்களால் இயன்ற அளவு நூல்களையும் அன்பளிப்பாகத் தந்துதவி நூல் நிலையத்தை விரிவாக்க உதவுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

# பசுமந்தான் நெருப்பு அகதிகளுக்கு அன்னமளிப்பு

இரங்கூன் பசுமந்தானில் 5-3-58 மாலை ஏற்பட்ட பயங்கர மான நெருப்பு விபத்தின் காரணமாய் அகதிகளாகித் தவித்த மக்களுக்கு உடனடியாக அன்னமளிக்கும் சேவையைச் சங்கம் ஏற்றுக்கொண்டு 6-3-58 முதல் 12-3-58 முடிய காலையும் மாலை யும் அன்னமளிக்கப்பெற்றது.

அகதிகளுக்கு அன்னமளிக்கும் நமது முகாமிற்குப் பர்மா முன்னாள் பிரதமர் கனம் ஊநூ அவர்கள் 9-3-58 மாலை வருகை தந்து உணவு தயாரிப்பு, உணவு விநியோகம், பல தொகுதிகளுக் கும் உணவு எடுத்துச் சென்று விநியோகிக்கும் முறை, தயாரிப் புக்குரிய பொருட்கள் ஆகியவற்றை எல்லாம் கூர்ந்து பார்த்து விட்டு மிகவும் திருப்தியுற்றார்கள். இந்தியர்—சிறப்பாக தமிழ்ப் பெருமக்களின் இத்தகைய சேவையை வியந்து பாராட்டி, இந்த அவசரப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வருவதற்குத் தான் நெஞ் சாரப் பாராட்டுவதாக சம்பந்தப்பட்ட எல்லோருக்கும் தெரி விக்குமாறும் கேட்டுக்கொண்டார்கள். செயலாளரின் வேண்டு கோளுக்கிணங்க, மீண்டும் 11-3-58 மாலை 6 மணிக்கு நமது முகாமுக்கு வருகை தந்து உணவளிப்பின்போது தாமும கலந்து கொள்வதாகக் கூறிச் சென்றார்கள்.

11-3-58 மாலை 5-15 மணிக்கு பிரதமர் ஊநூ அவர்களும், நகர மேயர் ஊலாமவுங் அவர்களும, பசுமந்தான் தொகுதி பார்லி மெண்ட்—கார்போரேஷன் அங்கத்தினர்களும், இந்தியத் தூது வர் அலுவலக முதற் செயலாளர் திரு. முருகேசன் எம். ஏ. அவர்களும், பல இந்திய சமூகத் தலைவர்களும், மற்றும் தமிழ்ப் பெரியார்கள் அநேகரும், தமிழர் சங்கத்தின் அன்னதானப் பந்த லுக்கு வருகை தந்திருந்தனர்.

தமிழர் சங்கத் தலைவர் திரு. இலட்சுமணன், பொதுச் செய லாளர் திரு. வி. எச். டேவிட் ஆகியோர் பிரதமர் ஊநூவை வர வேற்று தேநீர் விருந்தொன்று நடத்தி வைத்தனர், இவ்வைப வத்தின் தலைவர் திரு. இலட்சுமணன் அவர்களின் வரவேற் புரைக்கு, பிரதமர் அவர்கள் பதிலளிக்கையில். "பசுமந்தான் தொகுதி அங்கத்தினர் என்ற முறையிலும், பர்மா தேசத்தின் பிரஜையில் ஒருவன் என்ற முறையிலும் அன்னதானம் அளிக்

கும் இப்புண்ணிய கைங்கர்யத்தை மேற்கொண்டுள்ள தமிழர் சங்கத்திற்கு எனது மரியாதையைச் செலுத்திக்கொள்கிறேன். நான் விசாரித்து அறிந்த அளவில் இத்தகைய கஷ்ட நிவாரண சமயங்களிலெல்லாம் தமிழர் சங்கம் முன் வந்து இச்சேவையைத் தொடர்ந்து செய்து வந்திருக்கிறது என்பதைத் தெரிந்து மகிழ்ச்சியடைகிறேன். இந்த அன்னதான சேவையை மேற்கொண்ட உங்களுக்கும், இப்புண்ணிய காரியத்துக்கு நன்கொடை, சாமான்கள் கொடுத்துதவியவர்களுக்கும் எனது நன்றி. ஏழைகளுக்கும் அகதிகளுக்கும் அன்னதானம் செய்பவர்கள் ஒரு போதும் அன்னத்திற்குக் கஷ்டப்படமாட்டார்கள். பட்டினி கிடக்க வேண்டிய நிலை எக்காலத்திலும் ஏற்படாது.

"தமிழர்கள் ஒவ்வொரு சமயத்திலும் முன்வந்து செய்து வரும் இந்தச் சேவை மகா புண்ணியமானது மறப்பதற்கு இயலாதது. உங்கள் எல்லோருக்கும் நீண்ட ஆயுளை அளிக்க இறைவனை நான் பிரார்த்திக்கிறேன்." எனக் கூறி முடித்தார்.

நெருப்பு அகதிகளுக்கு அன்னமளிக்க உணவுப்பொருட்களும், நன்கொடைகளும் கொடுத்துதவிய பெரியார்களுக்கும், தோழர்களுக்கும், 10-3-58ல் அன்னமளிக்கும் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்ட மொகல் வீதி, நகை வியாபாரிகளுக்கும், அதற்கு ஏற்பாடு செய்துகொடுத்த சங்கப்பொருளாளர் தி. ஏ. கே. இலட்சுமணன் அவர்களுக்கும், 11-3-58ல் அன்னமளிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட பர்மா நாட்டுக் கோட்டை நகரத்தார்களுக்கும், உணவு சமைப்பதற்குப் போதுமான பாத்திரங்கள் கொடுத்தும், இடமும் கொடுத்துதவிய நகரத்தார்களுக்கும் சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

நிவாரண முகாமில் முழுப்பொறுப்பையும் பொறுப்புணர்ச்சியுடன் நிர்வகித்த முன்னாள் தலைவர் திரு. ஏ. எஸ். ஏகாம்பரம் அவர்களுக்கும், துணைச்செயலாளர் திரு. ஆர். வி. ஜெகநாதன் அவர்களுக்கும், திரு. மா. க. முத்துத்தேவர் அவர்களுக்கும், திரு. நா. சி. நாச்சியப்பா மற்றும் உடனின்று ஒத்துழைத்தச் சகோதரச் சங்க அன்பர்களுக்கும், உணவு பக்குவம் குன்றாமல் கவனமுடன் செயலாற்றிய திரு. கே. எஸ். மணி அவர்தம் தோழர்களுக்கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

நிவாரண முகாமுக்கு அவ்வப்போது உடனுக்குடன் தேவைப்பட்ட பொருள்களைச் சேகரிப்பதில் கண்ணும் கருத்து

மாக நின்று போதுமான அளவு திரட்டித்தந்த சங்கத்தலைவர் திரு. எஸ். இலட்சுமணன் அவர்களின் சிறப்புமிக்கத் தொண்டையும், சங்கப் பொருளாளர் திரு. ஏ. கே. இலட்சுமணன் அவர்களது அயராத உழைப்பும் உதவியும் குறிப்பிடத்தக்கது.

அகதிகளுக்குச் சாதம்கொண்டுபோய் பல முகாம்களுக்கு உதவ ஜீப் வண்டி கொடுத்துதவிய பசுமந்தான் திரு. மாரிமுத்துப் பிள்ளை அவர்களுக்கும், அண்டா பாத்திரங்கள் கொடுத்துதவிய கம்பை குருநசிங்க மடம் திரு. ஆ நாகலிங்கத்தேவர் அவர்களின் குடும்பத்தினர்களுக்கும், சகோதரச் சங்கங்களான ஜெய் ஹிந்த் சேவா சங்கம், பாரதிதாசன் படிப்பகம், சமரச சுத்த சன்மார்க்க சங்கம், இளைஞர் முன்னேற்றக் கலைமன்றம், எஸ். பி. ஜி. ஏ. கம்பவுண்ட் திருவள்ளுவர் படிப்பகம், நேதாஜி வாலிபர் சங்கம், பர்மா தமிழ் இளைஞர் ஐக்ய சங்கம், தென்னிந்திய ஹோட்டல் தொழிலாளர் சங்கம், நாடார் மகாஜன சங்கம் மற்றும் பல தோழர்களின் உதவிக்கும சங்கத்தின் நன்றி உரித்தாகுக.

நிவாரண வேலை துரிதமாக மக்கள் ஆதரவுடன் நடக்க அவ்வப்போது பிரசுரம் செய்து ஊக்கமூட்டிய தினத்தாள்களான ரஸிக ரஞ்சனி, தொண்டன் பத்திரிகைகளின் ஆசிரியர்களுக்கும், அதிபர்களுக்கும் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.



# நன்றி

சங்கத்தின் இரண்டு ஆண்டுகள் நிர்வாகத் தொண்டுகளில் கலந்துகொண்டு சங்கப்பணிகள் திறம்பட நடைபெறுவதற்கு உதவியாயிருந்த தமிழ்ப் பெருமக்களுக்கும், சிறப்பாக சங்கப் பேரவை, செயற்குழு, கிளைக்குழுக்களாகிய இளைஞர்பகுதி, மாதர் பகுதி, சாரணர்பகுதி, கட்டிடக்குழு, எப்.ஆர்.ஸி. கண்காணிப்புக் குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கும், சமூகச் சங்கங்களுக் கும், சகோதரச் சங்கங்களுக்கும், பொது நலப்பணிகளுக்கெனத் தேவைப்படும் பொருளுதவி தந்துதவிய நன்கொடையாளர்களுக் கும், விசேட நன்கொடையாளர்களுக்கும், சங்க வரவு செலவு கணக்குகளை மாதாமாதம் பரிசோதித்துதவிய திரு. ஏ. கிருஷ்ண சாமி நாயுடு அவர்கட்கும், சங்கக் கணக்குத் தணிக்கையாளர் திரு. பொ. வீராச்சாமி பிள்ளை எம். ஏ. எம். எல். அவர்கட்கும், சங்கத்திற்குப் பல துறைகளிலும் ஆக்கமும் ஊக்கமும் அளித்த பெரியார்கட்கும், இளைஞர்கட்கும், சங்க நிகழ்ச்சிகளிற் கலந்து கொண்டு தலைமை வகித்தும் சொற்பெருக்காற்றியும் சிறப்பித்த அன்பர்கட்கும், சங்க அறிக்கைகளை அவ்வப்போது வெளியிட்டு ஆதரவளித்துவரும் ரஸிக ரஞ்சனி, தொண்டன், பர்மா நாடு, தந்தி, நியூ டைம்ஸ் ஆப் பர்மா, பர்மன், பர்மா ஸ்டார், முதலிய பத்திரிகைகளுக்கும், அதன் நிர்வாகிகள் ஆசிரியர்களுக்கும், சங்க அச்சு வேலைகளை நன்முறையில் முடித்துத்தரும் நேரு பிரஸ், ரஸிக ரஞ்சனி, ஜெமினி முதலிய அச்சகப் பொறுப்பாளர்களுக் கும், சங்க நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துதவிய சாந்தா ஆர்ட் போட்டோ, அசாத் போட்டோ, அஜந்தா ஆர்ட் போட்டோ, சிம்லா போட்டோ ஆகிய ஸ்டூடியோ அதிபர்களுக்கும், சங்க வாசகசாலைக்கு பத்திரிகைகள், புத்தகங்கள், காலண்டர்கள், அனுப்பிய அன்பர்களுக்கும், பர்மா, இந்தியா, சிலோன், பிரிட் டன், அமெரிக்கா, ருஷ்யா, சீனா, பிரான்ஸ், போலந்து முதலிய நாட்டுத் தூதுவர்கள் காரியாலயங்களிலிருந்து அறிக்கைகள், புத்தகங்கள் முதலியவைகளை அனுப்பித்தந்த அவற்றின் நிர்வாகி களுக்கும், சங்க வளர்ச்சிகருதி, சங்கத்தின் எல்லாப் பொதுப் பணிகளிலும், ஆர்வமோடு கலந்துகொண்டு தொண்டாற்றிய சங்கப் பேரன்பர்கள் அனைவர்க்கும், இரண்டாண்டுகளின் பொங்கல் விழாக்களில் கலந்துகொண்டு பெருமையளித்த முன் னாள் பிரதமர் ஊநூ அவர்கட்கும், திருமதி ஊச்சிட் தாங் அவர்

கட்கும், சென்னை கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கட்கும், மற்றவகைகளில் பங்குகொண்ட எல்லா பெரியார் கட்கும், இளைஞர்கட்கும், சகோதரிகட்கும், எப். ஆர். ஸி. சம்பந்த மான வேலைகளைத் துரிதமாகவும் ஒழுங்காகவும் செயலாற்றி உதவிய பெரியார்கட்கும், இளைஞர்கட்கும், கட்டிடம் வாங்கு வதற்கும், செப்பனிடுவதற்கும் நிதிகுடுத்துதவிய பெரியார்கட் கும், சங்க அலுவலகத்திற்கு மேஜை ஒன்றும், மறைவு தட்டி ஒன்றும் அன்பளிப்பாகக் கொடுத்துதவிய ரஸிக ரஞ்சனி பத்திரி க்கையின் அதிபர் திரு. கே.எஸ். பொன்னையா பிள்ளை அவர்கட்கும், மேஜை ஒன்று அன்பளிப்புக்கொடுத்த திரு. செ. முகம்மது யூனூஸ் அவர்கட்கும், ஒரு பெரிய நிலைக்கண்ணாடியை அன்பளிப்பாகக் கொடுத்துதவிய சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தார்களுக்கும், இவ்வறிக்கையை நல்ல முறையில் தயாரிக்க ஒத்துழைத்த திரு. அசாத் க. இராமசாமி அவர்கட்கும் சங்கத்தின் மனமார்ந்த நன்றியும் வணக்கமும் உரித்தாகின்றது.

## வேண்டுகோள்.

கடந்த ஆண்டுகளைப்போல, வருகின்ற புதிய ஆண்டிலும் சங்கம் தனது பொது நலப்பணியை மேற்கொண்டு திறம்படச் செயலாற்றுவதற்கு, பர்மா வாழ் தமிழ்ப் பெருங்குடி மக்கள் அனைவரும் ஒத்துழைப்பைத் தருவீர்களென பெரிதும் நம்பு கிறோம். பர்மாவாழ் தமிழ்ப் பெருமக்கள் ஆண்டுச் சந்தா கியா ஒன்று வீதம் செலுத்தி ஆயிரக்கணக்கில் சந்தாதாரர்களாகச் சேர்ந்து, சங்கம் தனது விரிவான பெரும் பணிகளை வெற்றிகர மாக நடத்திச்செல்ல ஆதரவு தருமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இங்ஙனம்

**வி. எச். டேவிட்**

பொதுச்செயலாளர்

**அகில பர்மா தமிழர் சங்கம்.**

## வாழ்த்துச் செய்திகள்

அகில பர்மா தமிழர் சங்கத்தின் ஐந்தாவதாண்டு விழாவிற்கு
வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய பெரியார்கள்.

1. திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள், கல்வி - நிதி இலாகா மந்திரி, சென்னை.
2. " ஜே. சிவசண்முகம் பிள்ளை, மெம்பர் யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன், நியூ டெல்லி.
3. " தமிழ் அறிஞர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், சென்னை
4. " கே. ராஜாராம் அவர்கள், தலைவர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, சென்னை
5. " கவிஞர் ரா. சொக்கலிங்கம் அவர்கள், அமராவதிபுதூர்
6. பிரபல தொழிலதிபர் திரு. அ. மு மு. முருகப்ப செட்டியார் அவர்கள், சென்னை
7. முத்தமிழ்க் காவலர் திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள், திருச்சி
8. திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள், தலைவர், தமிழரசுக் கழகம், சென்னை
9. " கா. இராமனுதன் அவர்கள் கோலாலம்பூர்
10. " மு. முத்துராமலிங்கம் அவர்கள் பேரையூர்
11. " கி. வா. ஜகந்நாதன் அவர்கள், ஆசிரியர், கலைமகள், சென்னை
12. " ஆர். சுப்பிரமணியம் அவர்கள், தலைவர், பம்பாய்த் தமிழ்ச் சங்கம், பம்பாய்

---

### அகில பர்மா தமிழர் சங்கத்தின் ஆயுள் அங்கத்தினர்கள்

1. திரு. சி. சிவபூஷணம்
2. ,, எஸ். கே. நாராயண ஐயர்
3. ,, சு. ரா. வெ. காளிமுத்துப் பிள்ளை
4. ,, கே. எஸ். பொன்னையா பிள்ளை
5. ,, எம். ஆர். புருஷோத்தமன்
6. ,, பி. எம. சுந்தரம் (A) ஊக்கின் மவுங்
7. ,, தி. சண்முகத் தேவர்
8. ,, ஆர். எம். இராமலிங்கத் தேவர்
9. ,, ஊ ஓன் மாங் (A) எஸ். கே. பொன்னுச்சாமி
10. ,, எஸ். வி. அங்குத்துரை
11. ,, ஆர். செல்லம் நாடார்

12. ,, எஸ். இலட்சுமணன்
13. ,, வி. டி. வி. பிள்ளை
14. ,, வெ. கந்தசாமி
15. ,, ஆர். வேணுகோபால் ரெட்டியார்
16. ,, கே. வி. பொன்னையாக் கோன்
17. ,, எஸ். ஆர். வில்லித் தேவர்
18. ,, செ. செ. செபஸ்தியான் (A) மவுஞ்சி

சங்கத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக நின்று ஆயுள் சந்தா செலுத்தி ஆதரவளித்த பெரியார்களுக்கும், அன்பர்களுக்கும் நன்றி செலுத்துவதுடன், கீழ்குறிப்பிடும் அன்பர்கள்

திரு. எ. கே. இலட்சுமணன்
,, அ. மு. மு. அங்கப்ப செட்டியார்
,, வி. சி. தர்மலிங்கத் தேவர் (அதிபர் ஜெமினி பிரஸ்)
,, சுப. லெட்சுமணன் செட்டியார்

ஆகிய நால்வரும் இவ்வாண்டு ஆயுள் சந்தா செலுத்தியமைக்கு சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

அகில பர்மா தமிழர் சங்கத்தின் ஏவிளம்பி, விளம்பி ஆண்டுகளின்

**(1957—58, 1958—59)**

**போஷகர்கள், செயற்குழு, பேரவை உறுப்பினர்களின் விபரம்.**

**போஷகர்கள்.**

திருவாளர்களான:—

1. எஸ். ஆர். வேணுகோபால் ரெட்டியார்
2. இ. வெள்ளைச்சாமித் தேவர்
3. வை. மு. முத்துக்குமார் நாடார்
4. ஹாஜி இ. எம். அப்துல் ரஹிமான்
5. ஆர். எம், எழ். அண்டு எ. எஸ். சின்னத்தம்பி நாடார்
6. எஸ். டி. வேலு பிரதர்ஸ்

**சட்ட ஆலோசகர்கள்**

திருவாளர்களான:—

1. பி. ஜி. சுந்தரம் பி. ஏ. பி. எல், அட்வகேட்
2. ஜி. டி. வில்லியம்ஸ் பி, ஏ. பி. எல், ,,

**கணக்குப் பரிசோதகர்**

திருவாளர். பி. வீரச்சாமி பிள்ளை எம். ஏ. எம். எல்.

## செயற்குழு உறுப்பினர்கள்

திருவாளர்களான:—

1. தலைவர், எஸ். இலட்சுமணன்
2. துணைத் தலைவர்கள், டி. என். பி. சையது இஸ்மாயில்
3. ,, எஸ். செல்லையா நாடார்
4. பொதுச் செயலாளர் வி. எச். டேவிட்
5. துணைச் செயலாளர்கள், ஆர். வி. ஜெகநாதன்
6. ,, செ. முகம்மது யூனூஸ்
7. பொருளாளர், ஏ. கே. இலட்சுமணன்
8. அங்கத்தினர்கள், ஆர். எம். இராமலிங்கத்தேவர்
9. ,, சு. ரா. வெ. காளிமுத்துப் பிள்ளை
10. ,, ஏ. எஸ். ஏகாம்பரம்
11. ,, சி. சிவபூஷணம்
12. ,, பு. கு. அ ஆறுமுக நாடார்
13. ,, ஏ. கிருஷ்ணசாமி நாயுடு
14. ,, தி. சண்முகத் தேவர்
15. ,, பழ. சண்முகம்
16. ,, எஸ். பி. ரெத்தினம்
17. ,, எஸ். சிதம்பரம் பிள்ளை
18. ,, மா. க. முத்துத் தேவர்
19. ,, அரு. காந்தி அண்ணாமலை
20. ,, ஆ. சின்னச்சாமித் தேவர்
21. ,, எஸ். எஸ். செபஸ்தியான் உடையார்

## பேரவை உறுப்பினர்கள்

திருவாளர்களான:—

1. எஸ். மாணிக்கம்
2. கே. எஸ். சேதுச் செட்டியார்
3. மா. வேணு
4. கே. ஏ. கண்ணன்
5. அ. ராம. ஐயம் பெருமாள்
6. உ. வேல்ச்சாமி பாவலர்

# கட்டிட நிதிக்கு,

## நிதி உதவியவர்களின் பெயர் விபரம்.

### 1959, ஜூன் மாதம் 30-தேதி வரை

திருவாளர்களான:—

| | | |
|---|---|---|
| 1. | எஸ். ஆர். வேணு கோபால் ரெட்டியார், சங்கப் போஷகர். | கியா 17,500 |
| 2. | நாட்டுக்கோட்டை நகரத்தார் கோவில்கள் தர்ம பரிபாலனசபை இரங்கூன். | கியா 5,001 |
| 3. | பர்மா நாடார் மஹாஜனங்கள். | கியா 5,001 |
| 4. | ஏ. கே. இலட்சுமணன், நகை வியாபாரம், முகல் வீதி | கியா 1,501 |
| 5. | எல். இலட்சுமணன், (தலைவர்) சாந்தா ஆர்ட் போட்டோ ஸ்டுடியோ | கியா 1,001 |
| 6. | டாக்டர் என். ராஜன் எம். பி., பி. எஸ், அதிபர் ராஜன் டிஸ்பென்சரி. | கியா 1,001 |
| 7. | எஸ். எஸ். செபஸ்தியான் உடையார் அதிபர், செபஸ்த்தியான் ஸ்டோர்ஸ் | கியா 1,001 |
| 8. | தி. சண்முகத் தேவர், அதிபர், தேவர் சிற்றுண்டிசாலை | கியா 1,001 |
| 9. | மட்டன் வியாபாரிகள் சங்கம், இரங்கூன் | கியா 1,001 |
| 10. | எஸ். எம். சண்முகம் அவர்கள், நகை வியாபாரம், முகல் வீதி | கியா 501 |
| 11. | எல். இலட்சுமணநாதன், கண்ட்ராக்டர், 122-வது வீதி, இரங்கூன் | கியா 501 |
| 12. | எம். கே. சிக்கந்தர் மஸ்தான் அம்பலம், மட்டன் ஸ்டால், காந்தம் | கியா 251 |
| 13. | ஏ. காசி சேர்வை அதிபர், சாரதா நிட்டிங் ஒர்க்ஸ் | கியா 101-25 |
| 14. | கே. ஆர். வெங்கட்ராம் பார்-அட்லா | கியா 101 |
| 15. | ஒரு முஸ்லீம் அன்பர் | கியா 5 |
| 16. | அகில பர்மா தமிழர் சங்கத்தில் உண்டியல் மூலம் வசூலானது | கியா 1,300 |
| 17. | கம்பை பெருமாள் கோவில் காம்பவுண்டி லிருக்கும் M. N. S. சிவஞண்டி அவர்கள் மூலம் சில்லரையாக வசூலித்துத்தந்தது | கியா 65 |

மொத்தம் கியா 36,833-25

## கட்டிட நிதிக்கு வாக்களிக்கப்பெற்று, வரவேண்டியவைகள்

1. திருவாளர். இ. வெள்ளைச்சாமித் தேவர் கியா 2,501
2. ,, ஆர். எம். ராமலிங்கத் தேவர் கியா 1,001
3. ,, எ. கௌரி சேர்வை பவுண்ட்ரி கியா 1,001
4. ,, சி. சிவபூஷண முதலியார் கியா 501
5. திரு. அ. ராம. ஐயம்பெருமாள் உடையார் அவர்கள் பால் மாடு ஒன்று கன்றுடன் தருவதாகவும் அல்லது கியா. 251 தருவதாகவும் வாக்களித்துள்ளார்.

### கட்டிடத்திற்குப் பொருள் கொடுத்து உதவியவர்கள்

1. திரு. எம். எஸ். முத்துச்சாமி நாடார், இரும்பு வியாபாரம், கிழக்கு இரங்கூன். கியா. 300 மதிப்புள்ள இரும்பு கர்டர்கள்.
2. திரு. எல். மெய்யப்பன் பி. காம் (இன்கம்டாக்ஸ் டிபார்ட்மெண்ட்) கியா. 200 மதிப்புள்ள 6 டியூப் லைட் செட்டுகள்.

### சங்கக் கட்டிட நிதிக்கு

**உயர்திரு. எஸ். ஆர். வேணுகோபால் ரெட்டியார் அவர்கள் மறுபடியும் கியா. 5000 வழங்கினர்கள்.**

தமிழர்களுக்கென ஒரு பொது நிலையம் வேண்டும்; அதற்கு வசதியுள்ள தனிக்கட்டிடமும் வேண்டும்; அதுவும் தனக்கென்று உரிமையுள்ளதாகவும் இருக்கவேண்டும் என்னும்—பர்மா வாழ் தமிழர்களின் உள்ளக்கிடக்கையைப் பூர்த்திசெய்ய சங்கப் பொறுப்பாளர்கள் முயற்சித்த பொழுது, கட்டிடத்தின் பாதி கிரையத் தொகையை உடனடியாக உதவி ஊக்குவித்ததுடன், மேலும் சங்கக்கட்டிடத்தை நல்ல முறையில் பராமரித்து வருவதற்கென— அதற்கென்று கியா 5000, சங்கக் கட்டிடத்தின் கீழ்த்தள மண்டபம் (டாக்டர் ராஜா எஸ். இராமநாத ரெட்டியார் மண்டபம்) திறப்புவிழாவில் திரு. எஸ். ஆர். வேணுகோபால் ரெட்டியாரவர்கள் வாக்களித்தபடி, அந்தத்தொகை கியா. 5000-த்தையும் வாங்கி, சங்கக் கணக்கில் பாங்கியில் டிபாசிட் செய்திருக்கிறது. திரு. வேணுகோபால் ரெட்டியாரவர்களின்—உற்ற தருணங்களில் உதவும் பெருந்தன்மையான கடமை உள்ளத்திற்கு சங்கம் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

# அகில பர்மா தமிழர் சங்கம்

## 1-10-57 முதல் 30-6-59 வரையுள்ள வரவு செலவு கணக்கு விபரம்

| வரவு | கியா. | பியா. | செலவு | கியா. | பியா. |
|---|---|---|---|---|---|
| நன்கொடை .... .... | 49,286 | 55 | எப். ஆர். வி. வினியோகம்—திருத்தங்கள் | | |
| ஆண்டு சந்தா .... .... | 27,703 | 25 | பகுதி ஊழியர்கள் சம்பளம் .... | 15,823 | 15 |
| விசேஷ நன்கொடை .... .... | 946 | 00 | தற்காலிக உதவியாளர்கள் அலவுன்ஸ் .... | 10,355 | 50 |
| ஆயுள் சந்தா .... .... | 400 | 00 | சம்பளச் செலவு .... | 3,690 | 00 |
| கிளைச்சங்கச் சந்தா .... .... | 227 | 00 | பிரிண்டிங் செலவு .... | 4,477 | 70 |
| நூல் நிலையச் சந்தா .... .... | 12 | 00 | சில்லரைச் செலவு .... | 2,839 | 80 |
| | | | விழாக்கள் செலவு .... | 2,188 | 53 |
| | | | ஸ்டேஷனரிச் செலவு .... | 1,864 | 34 |
| | | | உபச்சாரச் செலவு .... | 1,451 | 30 |
| | | | போக்குவரத்துச் செலவு .... | 643 | 10 |
| | | | விளம்பரச் செலவு .... | 465 | 00 |
| | | | மின்சாரச் செலவு .... | 450 | 02 |
| | | | பத்திரிகைச் செலவு .... | 346 | 45 |
| | | | தபால் தந்திச் செலவு .... | 330 | 57 |
| | | | வீட்டுவாடகைச் செலவு .... | 300 | 00 |
| | | | இளைஞர் பகுதிச் செலவு .... | 132 | 00 |
| | | | செலவு நீக்கி அதிக வரவு .... | 33,217 | 34 |
| | 78,574 | 80 | | 78,574 | 80 |

## 30—6—59-ல் அயன் தொகை.

| வரவு | கியா. | பியா. | பற்று | கியா. | பியா. |
|---|---|---|---|---|---|
| சென்னைப் புயல் நிவாரண நிதிக்குழு .... | 112 | 81 | ஓரயில்ஸ் வீதி 109-113, கட்டிடம் சங்கத்திற்காக கொள் முதல் செய்த வகையிலும், பின்னர் மராமத்துச் செய்தவகையிலும் சேர்த்து கியா 51,557-20ம் ஓரயில்ஸ் வீதி 109, அறைக்கணக்கு கியா. 2,750ம் கட்டிடம் கொள்முதல் செய்வதற்கு முன் 109, நம்பர் அறையை ரிப்பேர் செய்த செலவு கியா. 1157-15ம் ஆக | 55,464 | 35 |
| தமிழ்நாடு புயல் வெள்ளக் கஷ்ட நிவாரண நிதிக்குழு .... ... | 1,485 | 99 | சாமான் கொள்முதல் கணக்கு<br>முன் அயன்தொகைப்படி கியா 812-48<br>கணக்கு வருடத்தில் கொள்முதல் கியா 2358-75<br>3171-23<br>கணக்கு வருடத்தில் பழைய பெஞ்சுகள் விற்று வரவு கியா. 150-00 | 3,021 | 23 |
| ஜவுளிக் கணக்கு ... ... | 8,276 | 87 | டைப் ரைட்டர் கொள்முதல் கணக்கு<br>முன் அயன்தொகைப்படி கியா 399-75<br>கணக்கு வருடத்தில் இங்கிலீஷ் டைப்ரைட்டர்கள் கொள்முதல் கியா 450-00<br>849-75<br>கணக்கு வருடத்தில் பழைய டைப்ரைட்டர் விற்று வரவு கியா 30-00 | 819 | 75 |
| நிவாரண நிதிக் கணக்கு... .... | 802 | 25 | கைமாற்றுக் கணக்கு ... | 596 | 00 |
| நேதாஜி நிவாரண நிதிக்கணக்கு .... | 422 | 98 | ஆர். இ. எஸ். பி. மீட்டர் டெபாசிட் ... | 60 | 00 |
| இவ்வருடம் செலவுக்கு மேல் அதிக வரவு கியா 33,217-34<br>முன் அயன் தொகைப்படி அதிகச் செலவு கியா 4476-17<br>ஐந்தாவது ஆண்டு விழா கியா 170-10 4,646-27 | 28,571 | 07 | சங்கச் சட்ட விதிப்புத்தகக்கணக்கு ... | 442 | 50 |
| கட்டிட மராமத்து நிதிக்கணக்கு திரு. எஸ். ஆர். வேணுகோபால் ரெட்டியார் மூலம் .... .... | 5,000 | 00 | நூல் நிலையம் கணக்கு ... | 303 | 50 |
| கட்டிட நிதிக்கணக்கு .... | 36,833 | 25 | ஏழாவது ஆண்டு விழா கணக்கு ... | 300 | 00 |
| | | | அட்வான்ஸ் கணக்கு<br>ஜவுளி இறக்குமதி கியா 3000-00<br>அச்சுக்கூலி கியா 700-00<br>வேலையாட்கள் கியா 550-00 | 4,250 | 00 |
| | | | இருப்பு இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்கில் | 9,460 | 10 |
| | | | கைவசம் செக் மூலம் கியா 5000-00<br>ரொக்க இருப்பு கியா 1787-79 | 6,787 | 79 |
| | 81,505 | 22 | | 81,505 | 22 |

எஸ். லெட்சுமணன் — தலைவர்

ஆர். வி. ஜெகநாதன் — துணைச்செயலாளர்

ஏ. கே. லெட்சுமணன் — பொருளாளர்

கணக்குகளையும் வவுச்சர்களையும் தணிக்கை செய்தேன். அவைகள் சரியாக வைக்கப்பெற்றிருக்கின்றன.

பொ. வீராசாமி பிள்ளை எம். ஏ., எம். எல்.
கணக்குப் பரிசோதகர்

ஒன்று பட்டாலுண்டு வாழ்வு-நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும். தாழ்வு

நேரு அச்சகம்,
205, மவுந்தாலே வீதி,
இரங்கூன்.

299